குறள் நெறி

தமிழ் வாழ்க

கட்சிச்சார்பற்ற அரசியல் இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் இயக்க வெளியீடு

ஆசிரியர் : டாக்டர் சி. இலக்குவனார், எம். ஏ., எம். ஓ. எல்., பிஎச். டி.

மலர் 1 | திருவள்ளுவராண்டு 1995 கார்த்திகைத் திங்கள் 16 ஆம் நாள்: (1-12-1964) | இதழ் 22



அறிவியற்பேரறிஞர்

கோ. து. நாயுடு

(2-ஆம் பக்கம்)

ஆங்கிலத்தினிடத்தில் அன்னைத் தமிழே வேண்டும்.

திங்களிருமுறை

தனி இதழ் 25 காசு

அறிவியற் பேரறிஞர்

கோ. து. நாயுடு

உழைப்பால் உயர்ந்த உயர் பேரறிஞர்
புதியன படைக்கும் புலமைச் செல்வர்
மின்இயல் பொறிஇயல் மேதகு தொழிலியல்
அனைத்திலும் பற்பல அரியன கண்டுளர்
ஐரோப்பாவினும் அமெரிக்காவினும்
தோன்றி யிருப்பரேல் துறைகள் தோறும்
பண்டாரகர் (Dr.) பட்டம் பலபெற்றிருப்பர்
நோபல் பரிசுகள் நொய்தின் சேர்ந்திடும்,
வண்டமிழ்த் துறையிலும் மருத்துவ இயலிலும்
புலத்துறை முற்றிய நலத்தகு பெரியார்
கண்மூடி வழக்கம் மண்மூடிப் போக
இளமை முதலே இனிய தொண்டுகள்
பற்பல ஆற்றிய பார்புகழ் பெரியார்
வந்து கண்டோர்க்கு வாரி வழங்கிடும்
வள்ளல் போலன்றி வையகந் தன்னில்
தக்கார் யாரெனத் தகுதியால் ஆய்ந்து
அன்பாய் அழைத்து யாரும் அறியாமல்
கோடி கோடியாய்க் கொடுத்து இன்புறும்
கொடைமடம் படாஅக் குரிசில்; கோவை
கோ. து. நாயுடு; குன்று உழைப்பாளர்
வியத்தகு செயல்கள் விளைத்திடும் விந்தையர்
இந்திய நாட்டில் தோன்றிய அதனால்
காட்டில் பூத்த மலரென வீணே
நாட்டில் ஒதுங்கி நலியும் நல்லோர்
அறிவுடை யோரை விரும்பா அவலம்
ஒழியும் நாளே உய்வுறும் நாளாம்
அறிஞரைப் போற்றுவோம்; அடைவோம் நன்மைகள்

கோவை அறிஞர் குன்று நலத்துடன்
வாழ்க பல்லாண்டு வாழ்க
சூழ்க நல்லின்பம் துயர்மிகு நாட்டிலே.

THOLKAPPIYAM In English

With Critical Studies.

C N. ANNADURAI, M. A., M. P. says :

"Tamilians have got everyright to feel proud of Tholkappiyam and Dr. Ilakkuvanar's work is bound to enable scholars of the English speaking world to evaluate correctly the heights attained by the Tamilians, long long before many nations attempted to perfect their languages".

KARUMUTHU THIYAGARAJAR says :

"Tamils are highly indebted to him for bringing out this most scholarly and thought provoking thesis."

Single Copy Rs. 25.

On receipt of Rs. 30 it will be sent by registered post.

Write to Kuralneri Publishing House, Madurai-6

பாரதிதாசன் பரம்பரை

தமிழகப் புலவர்கட்கும், கவிஞர்கட்கும்,

தமிழிளைஞர்கட்கும் அறிவிப்பன.

தமிழர் தம் மொழிப்புரட்சிக்கும், விடுதலைப் புரட்சிக்கும் பாயிரம்பாடிய முதற்பாவலன் பாவேந்தர் பாரதிதாசன். நம்மிடையே எழுபத்து நான்காண்டுகள் ஒல்காப் புகழுடன் வாழ்ந்து, செந்தமிழ்க்கும், தமிழர்க்கும், தமிழ்கூறு நல்லுலகெங்கும் நல்லரிய தொண்டு செய்து, எண்ணற்ற கவிதைகளை வாரி வழங்கி நல்லுயிர், உடல், செந்தமிழ் மூன்றும் பாரதிதாசன் என இருந்தவர் பாவேந்தர். அவரின் இனிய-எளிய செந்தமிழ்க் கவிதைகள் தமிழும் - தமிழுணர்வும் உள்ளவரை நிலைத்து நிற்கும் ஆற்றல் வாய்ந்தவை.

அவர்தம் பாவடிகள் பட்டு உருவாகாத புலவன் இல்லை. செத்தழியுந் தமிழுக்கு எத்திசையும் காப்பளிக்க வேண்டி அவர் எழுப்பிய முழக்கங்கேட்டு விழிக்காத தமிழன் இல்லை. அவர் விட்டுச்சென்ற பணியினைத் தொடர்ந்து நடத்தக்கூடிய ஆயிரங் கவிஞர்களை அவர் உருவாக்கிச் சென்றுள்ளார். ஆகவே திறம்பாடிவந்த மறவன் பாரதிதாசனைத் தமிழர் மறவாதிருத்தற் பொருட்டு **'பாரதிதாசன் பரம்பரை'** என்ற நிறுவனத்தை அவர் வழிக் கவிஞர்கள் அமைக்கின்றனர். இதன்கொள்கைகளை ஒருவாறு வகுத்துரைத்துப்போமாயின் நடைமெலிந்த அவர் குடும்பமும், கோழையாகக் கிடந்த தமிழனை நிமிரச் செய்த அவர்தம் கவிதைகளும் அவர் நோக்கிய தென்மொழியும் நாடும் பீடுற்று வாழ ஒல்லும் வகையெல்லாம் ஓவாதுழைக்க நிறுவுகின்ற முயல்வே ஆம் எனக்கொள்க. இத்தகைய உயர் தனி நிறுவனமே நாம் நிறுவப் புகும் "பாரதிதாசன்" எனும் நிறுவனம்.

குல, சமய, கட்சி என்றின்ன பிரிவுகளை மனத்தாலும் எண்ணாது நிறுவனத்தின் தாழாத் தளராத் தனி முயற்சியாலும்-கவிஞர்களின் ஒருமுக ஒத்துழைப்பாலும் -புலவர்களின் இகலற்ற வாழ்த்தாலும் தமிழிளைஞர்களின் அன்பையும் தன்பாற் கொண்டு பாரதிதாசன் பரம்பரை விளங்கும்.

இதைக் கண்ணுறும் கவிஞர்களும் புலவர்களும் தமிழிளைஞர்களும் இதில் சேர விருப்பமிருப்பின் தெரிவிக்க வேண்டுகிறோம்: அன்றியும் இந்நிறுவனம் செவ்வனே செயல்படுவதற்கான அடிப்படைக் கருத்துக்களையும் தெரிவிக்கவேண்டுகிறோம். நிறுவனத்திற்கு உறுதுணையாக நிற்போருக்கு அஃது உள்ளம் உயிர்-உடல் ஒன்றநன்றி பாராட்டக் காத்திருக்கின்றது. இனி இவ்வமைப்பு உங்களுடையது! இதன் வாழ்வு உங்கள் வாழ்வு! பாவேந்தரின் இடிமுழக்கம் இனி என்றும்தொடர உங்கள் அயரா முயற்சி துணை நிற்குமாக!

'பாரதிதாசன் பரம்பரை' எனும்நிறுவனத்தின்பால் தொடர்புகொள்ளுவதற்கும்-ஒப்புதல் தந்து உறுப்பினர் ஆகி உதவுவதற்கும் கவிஞர் வானம்பாடி,
3, கோவிந்தசாமி நாயக்கன் தெரு,
நெல்வயல், சென்னை-1
என்ற முகவரிக்கு எழுதுக.

தோற்றுவிப்பவர் : **'பாரதிதாசன் பரம்பரையினர்'**

கவிஞர். வாணிதாசன், கவிஞர். பெரி. சிவனடியார்,
கவிஞர். வானம்பாடி, கவிஞர். எழில்முதல்வன்,
கவிஞர். முருகு சுந்தரம்

(15—11—64 இதழின் தொடர்ச்சி)

முருகன் தமிழ்க் கடவுளே!

— தமிழண்ணல்
இராம பெரியகருப்பன், எம். ஏ.

எல்லோரும் நினைப்பதுபோல் இராமாயணத்தைப் பின்பற்றிக் கந்தபுராணம் அமைக்கப்பட்டதென்பது அந்நூல்கள் தோன்றிய காலஆராய்ச்சிப்படி சரியான கூற்றேயாயினும் முருகவரலாறேமுற்பட்டதாகும். சங்க இலக்கியத்தை ஆழ்ந்து கற்பவர்கள் வரலாற்றுக்கு மிக முற்பட்ட காலத்தே முருகனது வரலாறு-ஒரு பெருநாட்டுத் தலைவனது வரலாறுக, ஒரு பெருங்காப்பியத் தலைமகனது வரலாறுபோலத் திகழ்ந்தமையை மறுக்க வொண்ணாது.

மூன்றுவதாக சங்ககாலத்திலேயேவடமொழிஸ்கந்த-சனத்குமார தெய்வமாக்கதைகளும் முருகவரலாற்றுடன் இணைத்துக் கூறப்பட்டு அதன்மூலம் முருகனுடையதெய்வத் தன்மையும் பிறப்பும் யாவராலும் போற்றப்படுவனவாயின. முருகன் 'இந்துமதத் தெய்வச் சிறப்புப்' பெற்றான். இங்ஙனம் வடமொழிக் கதைகளுடன் கலந்த தெய்வ வழிபாட்டுத் தன்மைகளையே பிற்கால நூல்கள் அனைத்திலும் காண்கிறோம். ஆனால் ஒரு வேறுபாடு: சங்க நூல்களாகிய திருமுருகாற்றுப் படையிலும் பரிபாடலிலும் முருக வரலாற்று அடிப்படையுண்மைகளும் வடமொழிப் புராணக்கலப்புக்களும் ஓரளவு பிரித்தறியத் தக்கனவாக உள்ளன. பிற்காலத்தில் அவை பிரித்தறிய முடியாதபடி இணைந்து விட்டன.

முருகனைத் தமிழ்த் தெய்வம் என்பதற்கு மூன்று அடிப்படைக் காரணங்கள் உள: (1) முருகன் தமிழ் மக்களைக் காத்த வரலாற்றுத் தலைவன். அவனால் நாடும், மொழியும், தமிழ் இனமும் பெற்ற நன்மைகள் கணக்கற்றவையாகும். (2) சேயோன் மாயோன் முதலிய திணைக்கடவுள் முறைகளுடன் முருக வழிபாடும் இணைந்தமையால் தமிழ் மக்களின் முதற்பெரும் தெய்வ வழிபாட்டுச் சமய நெறியாக அது வளர்ந்தது. இம் முருக வழிபாட்டு நெறியே தமிழர் கண்ட 'சிவநெறி' யாகக் கனிந்தது என்பதற்கான காரணங்களையும் இக் கட்டுரை இறுதியில் தந்துள்ளேன். (3) பிற கடவுளர்களின் வழி பாடுகள் எல்லாம் வடமொழித் தொடர்புகளிலிருந்து பிரித்தறிய முடியாதபடி கலந்து விட்டன. முருக வழிபாடு ஒன்றுதான் வடமொழிப் புராணத் தொடர்புகளிலிருந்து பிரித்தறியக் கூடியதாக இன்றும் இலங்குகிறது. அதற்குக் காரணம் முருக வழிபாடு தமிழரிடையே நன்கு 'முருகி' வளர்ந்த பின்னரே வடமொழிக் கருத்துக்கள் கலந்தனவாதலின் அவை 'நீரினில் எண்ணெயென' மேலே மிதக்கின்றன. இதனாலேயே தமிழறிஞர்கள் பன்னெடுங்காலமாக முருகவழிபாடு தமிழர் வழிபாடு எனவும் முருகன் தமிழ்த்தெய்வம் எனவும் கூறியும் எழுதியும் பாடியும் வருகின்றனரேயன்றிப் பிற தெய்வங்கள் எல்லாம் முற்றிலும் தமிழ்த் தெய்வங்கள் அல்ல என்பதனால் அன்று. சாத்திரியார் "ஆரிய மதமும் தெய்வங்களும தமிழாக்கப்பட்ட பொது விதி"யை **(to the general rule of Aryan religion and deities being Tamilized)** இடையே புகுத்தியுரைப்பது முற்றிலும் பொருந்தாப் பொய்யுரையாகும். இங்கே நான் எடுத்துக் காட்டியுள்ள கருத்துக்கள் எல்லாம் என் கற்பனைக் கூற்றுக்கள் அல்ல, அவற்றை நிலைநாட்டுவதற்குப் போதிய சான்றுகள் உள.

குறள் நெறி பொங்கல் மலர்

'குறள் நெறி'யின் 25ஆம் இதழ் பொங்கல் மலராகவும் ஆண்டு மலராகவும் 13-1-65ல் வெளிவரும். பேராசிரியர்கள், அறிஞர்கள், கலைஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் கட்டுரைகள் தாங்கி ஐம்பதுபக்கங்கள் கொண்டு அழகுற விளங்கும். விலை உருபாய் ஒன்றே. விற்பனையாளர்கள் தமக்கு வேண்டும் படிகளை 15-12-64க்குள் அறிவிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.

இனிய எளிய தூய தமிழில்
எழுதப்பட்ட கட்டுரைகள்
வரவேற்கப்படுகின்றன.

விளம்பரங்கள் வெளியிடப்படும்

கட்டண விவரம் :

முழுப்பக்கம்	ரூ.	100
அரைப் பக்கம்	ரூ.	50

ஆங்காங்குள்ள குறள்நெறி விற்பனையாளர்கள் விளம்பரங்கள் பெற்று அனுப்பலாம். தக்க கழிவு தரப்படும். விளம்பரங்கள் 30-12-64க்கு முன் அனுப்பப்பெறல் நன்று.

I சூர் மா தடிந்த சுடர்வேல்

முருகன் கடலினுட் புகுந்து சூர் மா தடிந்தமை பல சங்கப் பாடல்களில் கூறப்பட்டுள்ளது. சங்க காலம் முருகனைத் தெய்வமாக வழிபட்ட காலம் என முன்னர்க் கூறினேன். நமக்குக் கிடைத்துள்ள சங்க நூல்களனைத்தும் முருகனைக் கடவுளென்ற கண்கொண்டு நோக்கிப் பாடியவை. அங்ஙனம் பாடும்போதும்முருக வரலாற்றுணர்வு தோய்ந்த நெஞ்சத்தினராகிய சங்கப் புலவர்கள் நமக்கு உண்மையை உணர்த்திவிடுகின்றனர். இப் பாடல்கள் முருகன் வரலாறு கடவுட் கதையாக வளர்ந்த திருப்பத்தையும் நமக்குப் புலப்படுத்துகின்றன. முதற்கண் இச் 'சூர்மா தடிந்தமை' பற்றிய புகழ்ப்பாக்களுள் ஒருசிலவற்றைக் காண்போம் :

"அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி
அவுணர் நல்வலம் அடங்கக் கவிழிணர்
மா[illegible]தல் தடிந்த மறுஇல் கொற்றத்து
எய்யா நல் இசைச் செவ்வேல் சேஎய்"

(திருமுருகு: 58—61)

இதன் பொருள் : "ஆறு வேறு வகைப்பட்ட வகைகளில், பகைவர்கள் அஞ்சும்படியாக நெருங்கிச் சென்று அவுணர்களின் வலிமை அழியும்படி, கீழ் நோக்கின பூங்கொத்துக்களையுடைய மாமரத்தை வெட்டின குற்றமற்ற வெற்றியினையும் யாராலும் அளந்தறியவொண்ணாத நல்ல புகழினையும் சிவந்த வேலையும் உடைய சேயோனே' என்பதாகும். இதனைப் பதினெட்டாம் பரிபாடல்,

"நீர் நிரந்து ஏற்ற நிலந்தாங்கு அழுவத்துச்
சூர் நிரந்து சுற்றிய மா தபுத்த வேலோய்"

என்று கூறும். கடல் நீர் நிரந்து சுற்றிய நிலம் திவு, அந்நிலஞ் சூழ்ந்த கடலைத்தன் அரணாகக் கொண்டிருந்த 'சூர்' காவல் மரமாகக் கொண்டு காத்த மாவை வெட்டி வீழ்த்திய வேலினையுடையவனே என்பதுஇதன் கருத்து. இதனை இன்னும் விளக்கமாகப் பதிற்றுப் பத்துப் பதினொன்றும் பாடல் நமக்குத் தருகிறது.

"வரைமருள் புணரி வான்பிசிர் உடைய
வளி பாய்ந்து அட்ட துளங்கிரும் கமஞ்சூல்
நளியிரும் பரப்பின் மாக்கடல் முன்னி
அணங்குடை அவுணர் ஏமம் புணர்க்கும்
சூருடை முழுமுதல் தடிந்த பேர் இசை
கடுஞ்சின விறல்வேள் களிறூர்ந் தாங்கு"

(4 ஆம் பக்கம் பார்க்க)

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடுவலியுடைய கடல்வழிச் சென்று அவுணர்கட்குப் பாதுகாப்பாக இருந்த சூரின் காவல் மரத்தை அடியுடன் வெட்டிய மிக்க புகழையும் கடுஞ்சினத்தையும் உடைய முருகவேள் களிறு ஏறிச் செல்லும் காட்சியை இது சுட்டுகிறது தமிழர்களுக்குக் கடலும் கடலிடையே வாழ்ந்த பகைவர்களும் பேரச்சம் விளைக்கும் கொடும்பகையாக இலங்கிய காலம் அது. இத்தொடர்களில் வரும் 'மா தடிந்து' என்பதனைத்தும் காவல்மரமாகிய மாவினைத் தடிந்து என்று பொருள் தருமென்பதற்குப்பிற இடங்களில் வரும் சொல்லாட்சிகள் பல துணை புரிகின்றன.

சங்க காலத்திற்கு முன்பு முருகன் கடற்கொள்ளைக்காரர்களை அழித்துத் தமிழர்களைக் காப்பாற்றியது போல, சங்க காலத்தில் அப்பகைவர்களிடமிருந்து தமிழர்களைக் காப்பாற்றியவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் ஆவான். முருகன் மா மரமாகிய காவல் மரமுடைய கடற் பகைவர்களை வென்று அம்மரத்தை வெட்டியமைபோல, நெடுஞ்சேரலாதன் கடம்பு மரமாகிய காவல் மரத்தையுடைய பகைவர்களை வென்று. அதனை வெட்டி வீழ்த்தினன். காவல் மரம் என்பது ஒரு நாட்டுக்குரிய, அங்கு மிக்கு வளர்கின்ற, அவ்வரசன் போற்றிக் காக்கின்ற அரசச் சிறப்புடைய மரம் (Royal-Tree) ஆகும். அதனை வெட்டி வீழ்த்துதல் என்பது பகைவனுடைய செருக்கை அடியோடு அழிப்பதைக் குறிக்கும். (புறம் 36, 57) ஒரு நாட்டை வென்றமைக்கு அது அடையாளமாகும். பகைவனுடைய காவல் மரத்தை அடியுடன் வெட்டிக் கொணர்ந்து, அதனால் தனது வெற்றி முரசத்தை அமைத்துக் கோடல் தமிழரசர்களின் வழக்கமாகும் நெடுஞ்சேரலாதனைப் பற்றிய தொடர்களில் சிலவற்றை இங்குக் காண்போம்.

"புலர் மொசிந்து ஓம்பிய திரள்பூங் கடம்பின்
கடியுடை முழுமுதல் துமிய" (பதி 11)

"இருமுந் நீர்த் துருத்தியுள்
முரணியோர்த் தலைச்சென்று
கடம்பு முதல் தடிந்த
கடுஞ்சின முன்பின் நெடுஞ்சேரலாதன்" (பதி 20

"வலம்படு முரசின் சேரலாதன்
முந்நீர் ஓட்டிக் கடம்பு அறுத்து" (பதி 127)

இவையும், இவை போன்ற பல தொடர்களும் (சிலம்பு: 2், 25. பதி: 17 அகம் 347) நெடுஞ்சேரலாதன் கடலினுட் சென்று கடம்பு தடிந்த கடுஞ்சினத்தைப் புலப்படுத்துவன. இனி இவற்றிடையேயுள்ள ஒப்புமைகளைக் காண்போம்.

நெடுஞ்சேரலாதன் கடலினுள் சென்று கடம்பு தடிந்தமையும் முருகன் கடலினுள் சென்று மா தடிந்தமையும் ஒரு தன்மையுடைய வரலாற்றுச் செய்திகளேயாகும். சூர் என்பது அச்சம், நடுக்கம், தீண்டி வருத்தும் தெய்வம் எனப் பல பொருள் தரும் அது அச்சம் என்ற பொருளில் தொடங்கியே பிறகு அச்சத்தால் ஏற்படும் நடுக்கத்தையும் அச்சந்தரும் பகையையும் அச்சம் உண்டாக்கும் சிறு தெய்வத்தையும் உணர்த்திற்று. நெடுஞ்சேரலாதனின் கடற்பகைவர்களைப் பேர் ஊர் சுட்டாமல் கடம்பு முதல் தடிந்த' எனப் பொதுவாகச் சுட்டுவதுபோலவே, முருகனுடைய கடற்பகைவர்களும் பேர் ,ஊர் சுட்டப்படாமல் 'மா தபுத்த,' 'மா தடிந்த; என்று சுட்டப்படுகின்றனர். சூர்மா தடிந்த எனவும் சூர் தடிந்த எனவும் வருதல், அப்பகை நெடுஞ்சேரலாதனுக்கு நீண்ட நாட்களுக்கு முன்னர்ப் பேரச்சம்தரும் பகையாக இருந்தமையைக் குறிக்கிறது

'சூருடை முழுமுதல் தடிந்த' (பதி 11) உரவுநீர் மாகொன்ற' (கலி: 27); 'மா முதல் தடிந்து' (பரி 21); 'கவிழ் இணர் மா முதல் தடிந்த' (முருகு: 60); 'சூர் மருங்கு அறுத்த' (அகம்: 59): 'சூர்மா தடிந்த' (சிலப்பு 24-8) என்பனபோல வரும் தொடர்களனைத்தும் 'கடம்பு முதல் தடிந்த' (பதி 12); 'வேம்பு முதல் தடிந்த' (பதி-44); 'வாகைக் கடிமுதல் தடிந்த' (பதி-40); கடம்பின் கடியுடை முழுமுதல் துமிய (பதி 11)' 'கடம்பு அறுத்து' (அகம் 127); 'கடம்பு எறிந்து' (சிலப்பு 25 1) என்பன போன்ற தொடர்கள் பலவற்றுடனும் ஒப்பிட்டுப் படிக்கப்படும் போது பகைவர்களை அழித்து அவர்களுடைய காவல் மரத்தையும் வெட்டி விடுதலாகிய செய்திகளைக் குறிப்பனவே, என்பது மேலோட்டமாகப் பார்ப்பார்க்கும் விளங்கும்.

இதனை நிறுவுதற்கு மேலும் சான்றுகள் உள. பதிற்றுப்பத்தின் பழைய உரையாசிரியர், "சூருடை முழு முதல் என்றது சூரவன்மாத் தனக்கு அரணாகவுடைய மாவின் முதல் என்றவாறு" என்று, இது கடிமரம் அல்லது காவல் மரம் என்பதைப் புலப்படுத்தினர். ஆனால் அவர் காலத்திலேயே புராணங்களும் தோன்றிவிட்டதாகலின், "இனிச் சூரவன் மாத்தான் ஓர்மாவாய் நின்றான் என்று புராணம் உண்டாயின், சூரனுதற்றன்மையையுடைய மாவின் முதல் என்றவாறும்" என்றும் உரையெழுதினர் (பதி 11). நச்சினார்க்கினியரும் திருமுருகாற்றுப் படையில் வரும் 'கவிழ் இணர் மா முதல் தடிந்த' என்ற வரிக்கு, சங்க கால மரபுகளை அவர் அறிந்திருந்தும் புராணத்தைவிட மனமிலராய், "அவுணர் எல்லாரும் தம்முடனே எதிர்ந்தார் வலியிலே பாதி தங்கள் வலியிலே கூடும்படி மந்திரங்கொண்டிருந்து சாதித்ததொரு மாவை வெட்டினான் என்றவாறு" எனச் சூரபன்மாவின் வேறாக ஒரு மாமரத்தை வெட்டினான் எனப் புதிய புராணம் எழுதிப்போயினர்.

பரிபாடல் 21 ஆம் பாடலில் இது நன்கு விளக்கமாக, கொள்ளாத் தெவ்வர்கொள் மாமுதல் தடிந்து' எனக் கூறப்பட்டுள்ளது. இதன் பொருள் 'தலைவனைக் கொள்ள மறுத்த பகைவர்கள் காவல் மரமாகக் கொண்டிருந்த மாவின் அடியை வெட்டி' என்பதாகும். பதிற்றுப்பத்தின் 11-ஆம் பாடலிலும் குமட்டூர்க் கண்ணனார் என்ற புலவர் கடல் மேல் சென்று கடம்பு தடிந்த இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப் பாராட்டுபவர், அவனைப் போல முன்பு கடல் பகைவர்களை அழித்த முருகனையே ஒப்பிட்டுக் கூறியிருக்கிறார். இப் பாடலுக்குக் குறிப்புரை எழுதிய டாக்டர் உ. வே சாமிநாத அய்யரவாகள், "**சேரனுக்கு முருகக் கடவுளை உவமை கூறவந்த புலவர் கடலிற் சென்று கடிமரந்தடிதலும், களிறூர்தலுமாகிய பொதுத்தொழில்களை இருவர்க்கும் சார்த்தி உரைத்தனர்**" என்று குறிப்பிட்டுள்ளார். தமிழ் நூல்களை ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் பதிப்பித்த டாக்டர் உ வே சா அவர்களைத் தவறுபட எழுதினர் எனக் கூறுவார் உண்டோ?

முப்புறத்தும் கடல் சூழ்ந்த தென்னாட்டிற்குப் பன்னெடுங்காலமாகக் கடற் பகைவர்களின் தொந்தரவு இருந்தது. இதனைக் கிரேக்க ஆசிரியர்களாகிய பிளினி தாலமி, பெரிபுளூஸ் என்ற நூலாசிரியர் ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர். **'The Pentingerian tables'** என்பவற்றிலும் இச் செய்தி காணப்படுகிறது. (**At the present day, voyages are made to India every year and companions of archers are carr ed on board, because the Indian are infested by pirates..." ,'It (Muziris) is not a desirable place of call, pirates being in the neighbourhood, who occupy a place called Nitrais " ...Pliny**) இச் செய்திகளை **!Beginnings of South Indian History'** என ஆங்கிலத்தில்டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் எழுதிய நூலில் (பக் 146 153) காணலாம. இதே நீலகண்ட சாத்திரியாரவர்கள் தொகுத்துத் தந்திருக்கும் **"Foreign Notices of South India'** என்ற நூலும் இதற்குத் துணை புரியும்,

(தொடரும்)

"ஆரியத்தில் திராவிடம்"

சென்ற இதழில் (பக்கம் 4) வெளிவந்த இக் குறிப்பை உதவியவர் திரு. ந. சஞ்சீவி, எம்.ஏ., எம். லிட். அவர்க்கு எம் நன்றி. — ஆசிரியர்

மானமுள்ள தமிழகத்தீர்! ஒன்றுசேரீர்!!

—கவிஞர் சுரா

தமிழாலே உயிர்வாழும் புலமை யோரே!
தமிழ்கெடுக்கும் இந்திக்கா ஏவல் செய்வீர்!
தமிழ்நாட்டு மண்தோன்றி உயர்ந்து போன
தாய்நாட்டீர்! இந்தியினைச் சுமத்தல் ஏனோ?
தமிழ்நாட்டின் அமைச்சர்களே! உங்கள் வாழ்வைத்
தரகர்க்கா அடகு வைத்தீர்? மொழிநா டெண்ணுத்
தமிழர்களே! விலையில்லா மானம் வீரம்
தலைப்பண்பை இந்திக்கா விற்பீர்? சொல்வீர்?

தந்திறனைத் தாம்மறந்தீர்; இந்தி இங்கே
தமிழோடு பண்பாடும் கொன்று தின்ன
வந்ததையும் மறந்தீரோ? விழியை விற்று
வாழ்கின்ற வாழ்வெதற்கு? சாதல் நன்றாம்!
இந்தியினை எதிர்ப்பதனால் புகழே கொள்வீர்
ஏற்பனவும் விழுப்புண்ணே! நமக்குப் பின்னர்
செந்தமிழை அழிக்கின்ற தீமை கொல்லச்
சேருங்கள்! வாருங்கள்! அறப்போர் செய்வோம்!

மாண்தமிழர் முதல்வேலை மொழியைக் காத்தல்
மறுவேலை சோறுண்ணல் உறங்கல் எல்லாம்!
'ஊண்பெரிது வாழ்க்கைநலம் வேண்டும், வீணில்
உரைப்பதுமேன் மொழிப்பெருமை? வேண்டா'
[என்பார்
வீண்வேலை மொழிக்கிளர்ச்சி என்றால் இந்தி
விலைப்படுத்தும் வேலையெல்லாம் வீணே யன்றோ!
ஊண்வேண்டும் என்பவருக்கு ஒன்று சொல்வோம்!
உலகத்தில் விலங்குகளும் உண்ணல் காண்க!

சோறென்றே போதுமெனில் இந்தி யாவைச்
சோலைகர் அமெரிக்கா விற்கே மாற்றம்
கூறாமல் விற்றிடட்டும்! அதனை விட்டுக்
குடியாட்சி என்பதெலாம் ஏய்ப்புத் தானே!
சோறென்றே போதுமெனில் இந்தி இங்கேன்?
சொரணையிலார் கூறட்டும்! குறிக்கோள் பற்றி
மாறாத இந்திப்போர் செய்வோம் உய்வோம்
மானமுள்ள தமிழகத்தீர் வாரீர்! சேரீர்!

மயிர்நீப்பின் உயிர்வாழாக்கவரி மாவை
மானத்தின் ஒளிவிளக்காய் கூறல் அன்றோ!
உயிரைவிட உயர்வன்றோ ஒழுக்கம் மானம்
உதவாதப் பேச்செல்லாம் குப்பைக் கூளம்!
பயிருள்ளே படிகின்ற பூச்சிப் போன்று
பாழ்படுத்த இந்தியினை நுழைத்தல் ஏனோ?
தயிரென்று சுண்ணம்பைக் கூறி விற்றால்
தரங்கெட்டுப் போனேமா? ஏற்றுக் கொள்ள!

ஒருமாட்டுக் கொருதாறே போதும் என்பார்
ஒருமைகூறும் ஆள்வோர்க்குப் பலநாள் சொன்
அருந்தமிழை இந்திவந்தால் அழிக்கும் என்று[னோம்
ஆண்டாண்டாய் காரணங்கள் விளக்கி வந்தோம்!
பொறுப்போடு ஆள்கின்றார் என்றால் இந்திப்
புறம்போக்குச் சிதைக்கருவை குழந்தை என்று
அரிப்பெடுத்து வருகின்றார்! ஆட்சிக் கோட்டில்
அத்தனையும் தீதென்றால் எவவா றேற்போம்?

செவிடர்க்கே இசையாலே பயன்தான் என்?
சேவல்களாய்ப் பலநாளும் கூவி நின்றோம்!
அவிந்துள்ள போதிலும் கூழை முட்டை
அழகாக இருக்குமன்றோ? அதனைப் போன்று
புவியாழ்வார் தூண்டில்போட் டிருக்கின் றாரே!
புரியாமல் தலையாட்டும் பொம்மை போன்றார்
குவியட்டும் எதிராக! தமிழைக் காக்க
கூடுங்கள் கேடுவெள்ளம் தடுக்க வாரீர்!

(15—11—64 இதழின் தொடர்ச்சி)

அண்ணாவுக்கு நெஞ்சுவிடு தூது.

-பேராசிரியர் அ. சங்கரநாராயணன்; எம் ஏ, எம் லிட்.

செந்தமிழர் கைக்கொண்ட சீர்த்திமிகுவாழ்க்கையெலாம்
பைந்தமிழ்ப் பத்துநீள் பாட்டினிலும்-சிந்தைவளர்

எட்டுத் தொகையினிலும் ஏற்றமாய்ப் பாடினரால்
கட்டி யுரைததபொய்க் கற்பனைகொல்-பட்டிமையே

சாலப் படைத்தவர்கள் சங்கநூல் நற்பயிற்சி
மூலத்தில் நன்கமையா மோழையால்-சிலமிகு

சங்கநூல் தெள்ளமிழ்தைத் தாம்மாந்தி ஓங்காமல்
இங்கதன் ஏற்றம் இகழ்ந்துரைப்பார்-அங்கவர்தம்

பிள்ளை மதித்திறனைப் பேசவும் நாணுதியோ?
கள்ள உளம்படைத்தோர் காணுதியோ-கொள்ளையின்பம்

சாலப் பொதுளியுள்ள சங்கநூல் தண்டேறல்
கோலமுடன் மாந்தியிங்குக் கொஞ்சுதமிழ்.ஓலக்கக்

காட்சியினை நன்குணர்ந்தோர் கன்னல்சேர் செந்தமிழின்
மாட்சியெலாம் கண்டவராம் மாறுபட்டோர்-தேட்டமிகு

செந்தமிழின் சீர்மைத் திறங்காணும் உள்ளமில்லா
மந்தமதி தாம்பெற்ற மாக்களெனச்-சிந்தையில்நீ

எண்ணுதியோ? சங்கநூல் இன்தமிழர் ஏற்றமாய்
நண்ணரும் நாண இங்கு நல்லியல் பண்ணரும்

நற்றமிழும் நாடக நற்றிறமும் நன்கியற்றிப்
பொற்புமிகு முத்தமிழைப் போற்றினரால்-
அற்றைநாள்

இவ்வுலகில் இல்லறத்தின் ஏற்றத்தைக் கண்டுமிகு
செவ்வியுடன் வாழும் திறங்கண்டார்-அவ்வையெனும்

சீராட்டி போன்றநற் செந்தமிழப் பெண்புலவர்
பாராளும் தன்மையினைப் பாரித்தார்-தாராரும்

மன்னரெலாம் வண்டமிழின் மாண்புணர்ந்து நல்லிசை
தென்னகத்தில் தாம்படைத்த சீர்மையினால்-
மன்னிநின்றார்

சாதிமதங்களெனும் சாரமற்ற தீவழக்குப்
பேதம் புகாதமிக்கும் பீழையினைக்-கோதில்லா

ஒண்டமிழர் நன்குணர்ந்தே ஒப்புரவாய் வாழுமுயர்
பண்புமிகு வாழ்வமைத்த பண்பினராய்க்-கண்டுயர்ந்தார்

செல்வத்து நல்பயனும் சீரோங்கும் ஆட்சியுஞ்சீர்
கல்வித் திறனும் கலைகளின்-நல்லியல்பும்

விண்டுயர்ந்தார் மேதினியில் காற்றோடு போராடிப்
பண்டே கலஞ்செலுத்தும் பண்புமிக-மண்டிநற்

செந்தமிழ் நாடதனின் சீர்த்த வளங்களெலாம்
இந்த வுலகத்தின் எண்டிசையும்-எந்தையர்

ஆண்மையுடன் சென்றளந்தே ஆண்டிருந்த
செல்வமெலாம்
மேன்மையுடன் கொண்டணைந்தார் மேனாளில்-காணும்

அன்றவர் கொண்டுயர்ந்த ஆன்றபேர் ஆள்வினையும்
பின்பவர் இவ்வுலகின் பேறெலாம்-நன்குபெற்று

வாழ்ந்துயர்ந்த செவ்வியும் வண்டமிழால் வீறுபெற்றே
நாந்தமிழர் நானிலத்தில் நன்குயர்ந்து—வாழ்ந்துமிகு

மாநிலத்தில் மக்களுக்கு மாண்புசேர் தொண்டாற்றத்
தாநின்று மன்னுதலைத் தாங்கூறித்து-நீணிலத்தில்

ஓங்குயரும் மக்கள் உரிமையினைக் காத்துயர்ந்து
விங்கு புகழ்சாற்ற வீற்றிருந்த-பாங்கினையும்

சங்கத் தமிழ்நூல்கள் சாற்றி உணர்த்திடுமால்
எங்கந்தச சீர்மையெலாம் ஏற்றமுடன்-பொங்கிமிகக்

கற்றுணர்ந்தே செந்தமிழர் கன்னித் தமிழ்மொழியின்
பொற்புணர்ந்து பூரித்துப் போற்றுவரோ-அற்றைநாள்

(15—11—64 இதழின் தொடர்ச்சி)

தொல்காப்பிய விளக்கம்

(டாக்டர் சி. இலக்குவனார்)

118. உயர்திணைப் பெயரே அஃறிணைப் பெயர் என்று ஆயிரண்டு என்ப பெயர்நிலைச் சுட்டே

பெயர்நிலைச்சுட்டு = பெயர்நிலைகளைப் பகுத்துக் கருதுமிடத்து, உயர்திணைப்பெயரே = உயர்திணைப் பெயர்கள் என்றும், அஃறிணைப் பெயரே = அஃறிணைப்பெயர்கள் என்றும், ஆயிரண்டு என்ப = அவ்விரண்டுவகைப்படும் என்று சொல்வார்கள் புலவர்கள்.

'திணை' எனும்பிரிவு வேறுமொழிகளில் காணப்படாத ஒன்று. மக்களை உயர்திணை என்றும் பிறவற்றை அஃறிணை என்றும் தமிழ் முன்னோர் வகுத்துள்ளனர். இவைபற்றிய விரிவு சொல்லதிகாரத்தில் காணலாம். 'உயர்திணை' என்பதற்கு ஏற்ப 'இழிதிணை' எனக் குறிப்பிடாது 'அல்திணை' எனக் குறிப்பிட்டதன் நயம் நோக்கத்தக்கது.

வேற்றுமை உருபுகள் பெயர்களின் பின்னால் அவற்றைச் சார்ந்துவரும் என்று கூறியவர் பெயர்களின் பகுப்பைப்பற்றியும் இங்குச் சுட்டிக்காட்டியுள்ளார்.

119. அவற்று வழி மருங்கின் சாரியை வருமே.

அவற்றுவழிமருங்கின் = பெயருக்கும் வேற்றுமையுருபிற்கும் இடையே, சாரியை வருமே = சாரியை வரும்.

காட்டு: மரம் + அத்து + ஐ = மரத்தை வெட்டினான்.
'மரம்' என்ற பெயருக்கும் 'ஐ' என்ற உருபிற்கும் இடையே 'அத்து' எனும் சாரியை வந்துளது.

120. அவைதாம்,
இன்னே, வற்றே, அத்தே, அம்மே
ஒன்னே, ஆனே, அக்கே, இக்கே
அன்னென் கிளவி உளப்படப் பிறவும்
அன்ன என்ப சாரியை மொழியே.

அவைதாம் ≈ மேலே சாரியை என்று கூறப்பட்ட அவைகளாவன. இன்னே ≈ இன்னும், வற்றே ≈ வற்றும், அத்தே = அத்தும், அம்மே = அம்மும், ஒன்னே = ஒன்னும், ஆனே ≈ ஆனும், அக்கே = அக்கும், இக்கே = இக்கும், அன்என்கிளவிஉளப்பட = அன்என்னும் சொல்லும் ஆகிற ஒன்பதும் சேர, பிறவும் ≈ இன்னும் இலக்கியங்களில் காணப்படும் பிறவும், என்ப சாரியை மொழியே = சாரியையாகவரும் சொற்கள் என்று புலவர் சொல்லுவர்.

ஆசிரியர் தொல்காப்பியர் தம் காலத்தில் பயின்றுவந்துள்ளவற்றைத் தொகுத்துக் கூறி, பின்னர் தோன்றுவனவற்றையும் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்பதற்காகப் 'பிறவும் அன்ன என்ப' என்று மொழிந்துள்ளார்.

தொல்காப்பியத்தில் காணப்படாத சாரியைகள் நூல்களில் காணப்படுமேல் அந்நூல்கள் தொல்காப்பியத்திற்குப் பிற்பட்டன என்று தெள்ளிதில் அறியலாம்.

121. அவற்றுள்
இன்னின் இகரம் ஆவின் இறுதி
முன்னர்க் கெடுதல் உரித்தும் ஆகும்

அவற்றுள் ≈ மேற்கூறப்பட்டுள்ள சாரியைகளுள், இன்னின் இகரம் = இன்சாரியையினது இகரம், ஆவின் இறுதி முன்னர் = 'ஆ' என்னும் சொல்லீற்றின் முன்னர், கெடுதல் ≈ மறைதல், உரித்தும் ஆகும் = உரியதும் ஆகும்.

காட்டு: ஆ + இன் + ஐ ≈ ஆனை.
'கெடுதல் உரித்தும் ஆகும்' என்றதனால் கெடாமல் 'ஆவினை' என நிற்றலும் உண்டு.

122. அளபாகு மொழிமுதல் நிலைஇய உயிர்மிசை னஃகான் றஃகான் ஆகிய நிலைத்தே.

அளபாகும் மொழிமுதல் = அளவினை உணர்த்தும் சொல்லுக்கு முன்னால், நிலைஇயஉயிர்மிசை ≈ நிலைபெற்ற உயிர்க்கு மேலாய் நின்ற னஃகான் = இன்சாரியையது னகரம், றஃகான் ஆகிய நிலைத்து = றகாரம் ஆகும் நிலைமையுடையது.

காட்டு; பத்து + இன் + அகல் = பதிற்று அகல்
'இன்' இற்று என ஆகியுள்ளது.

123. வஃகான் மெய்கெடச் சுட்டுமுதல் ஐம்முன் அஃகான் நிற்றல் ஆகிய பண்பே.

சுட்டுமுதல்ஐம்முன் ≈ சுட்டெழுத்தினை முதலாக உடைய ஐகாரத்தை இறுதியிலே உடைய சொல்லுக்கு முன்னால் வஃகான் மெய்கெட ≈ வற்றுச்சாரியை முன் உள்ள 'வ்' எனும் மெய் எழுத்து நீங்க, அஃகான்நிற்றல் ஆகிய பண்பே ≈ அகரம் நிற்றலாகிய பண்பினையுடையது.

காட்டு: அவை + வற்று + ஐ = அவையற்றை.

(தொடரும்)

பிழைதிருத்தம்; சென்ற இதழ் பக்கம் 7. 112ஆம் நூற்பா உரை: 'இல்முன்' என்பது 'புறநகர்' எனவும் எனும் தொடரில், 'புறநகர்' என்பதனை 'முன்றில்' எனத்திருத்துக.

தேவை

'குறள்நெறி' இதழ்க்குத் துணையாசிரியர் ஒருவர், பிழைதிருத்துவோர் ஒருவர், அச்சகத்திற்குமேலாள் ஒருவர், அச்சுக்கோப்பவர் ஒருவர், இயந்திரம் மிதிப்பவர் ஒருவர், பணியாள் ஒருவர் தேவை.

தகுதி, பயிற்சி, விரும்பும் ஊதியம் முதலியன குறித்து நற்சான்றிதழ்களுடன் 6—12—64க்குள் விண்ணப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

செயலர். 'குறள்நெறி'
மதுரை-6.

வள்ளுவர் சீற்றம்.

— நா. மீனவன், பி. ஏ.

தலைசிறந்த நூலாசிரியர்கள் "தாங்குதலின்றி வழி நனி பயக்கும் என்று வேம்பும் கடுவும் போன்ற வெய்ய சொற்களைத்"த் தங்கள் நூல்களில் கையாளுவர். இதற்கு "வாயுறை வாழ்த்து" என்று இலக்கணம் வகுத்தார் தொல்காப்பியனார்.

"வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
வேம்பும் கடுவும் போல வெஞ்சொல்
தாங்கு தலின்றி வழி நனி பயக்கும் என்று
ஓம்படைக் கிளவியின் வாயுறுத்தற்றே"

என்பது தொல்காப்பியச்சூத்திரம். உண்ணும்போது கைப்பாயிருப்பினும் பின்னர் நன்மை பயக்கும் மருந்து போல, கேட்கும் காலத்தில் செவிகைப்பத் துன்பம் பயந்தாலும் பிறகு நலம் தருமே எனக்கருதி ஒரு நூலாசிரியன் தான் செய்யும் நூலில் வேம்பும் கடுவும் போன்ற கடுமையான சொற்களைத் தங்கு தடையின்றிச் சொல்லிவைப்பதே "வாயுறை வாழ்த்து" என்பது தொல்காப்பியச் சூத்திரத்தின் விளக்கமாகும்.

இந்த இலக்கணத்தின் பாற்பட்டு சிறந்து விளங்குவதால் திருக்குறளை "வாயுறை வாழ்த்து" என்றே அழைத்தார் மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் என்ற புலவர்.

மதுரை இளவேட்டனாரால் இப்பெயர் சூட்டப் பெற்ற திருக்குறளில் பல இடங்களிலும்தங்கு தடையின்றி நன்னெறி உரைக்கக் கடுமையான சொற்கள் பயன் படுத்தப் பட்டுள்ளன. இந்த இடங்களில் எல்லாம் வள்ளுவர் பெருமான் ஒன்று மனம் நொந்து அல்லது சினம் கொண்டுதான் அவற்றைப் பயன் படுத்தியிருக்கிறார் என்பது அவற்றைப் படிக்கும் போது நமக்கு எளிதில் விளங்கும்.

நெறி தவறிய மக்களை அவர் மிகக்கடுமையான சொற்களாலேயே தாக்கியிருக்கிறார். 'பிணம்', என்றும், 'குருடர்' என்றும், 'செவிடர்' என்றும் 'பேர்மை' என்றும், "இருப்பதை விட இறப்பதே மேல்" என்றும் தீச்சொற்களால் நெறி பிறழ்ந்தோரை அவர் சுட்டியிருக்கிறார்.

இருப்பதில் இறப்பது மேல்

"ஒத்ததறிவான்உயிர்வாழ்வான்—மற்றையான்
செத்தாருள் வைக்கப்படும்',

ஒப்பரவு அறிந்து பிறருக்கு உதவியாக வாழுகின்றவனே உயிருடன் வாழ்பவன் — மற்றவன் செத்தவனே என்று கூறுமிடத்து 'பிணம்' என்ற சொல் தானே நிற்கிறது?

இவ்வாறே பிறன் மனையாளை விரும்பும் வெறியரை "விளிந்தாரின் வேறல்லர்" (செத்தவரே அல்லது வாழ்பவரல்லர்) என்றசொல்லால் 'பிணம்' என்று குறிக்கிறார். மற்றும் 'என்பு தோல் போர்த்த உடம்பு' 'இசை ஒழிய வாழ்வார்வாழாதவர்", அவை அஞ்சுவோர் 'உளரெனினும் இல்லாரோடு ஒப்பர்" என்றுகூறும்இடங்களிலும் வள்ளுவர் 'பிணம்' என்ற சொல்லால் திட்டுகின்றார். புறங்கூறிப் பொய்த்துயிர்வாழ்பவர்கள் வாழ்தலில் சாதல் நன்று என்று சபிக்கிறார்.

கற்றோரேயன்றி மற்றவர்கள் முகத்திரண்டு புண் உடையவர்கள் என்றும், 'கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர்' என்றும் கூறுமிடத்துக் கூசாமல் அவர் குருடர் என்று ஏசுகின்றார். கேள்வியின் அவசியத்தைவலியுறுத்துடமித்துக்'கெட்பினும் கேளாத்தகையவே கேள்வியாற்றோட்கப்படாத செவி' என்று கூறிச் செவிடர்களாக்குகிறார். 'மக்களே போல்வர் கயவர்". என்றும், 'மக்கட் பண்பு இலாதவர் மரம்போல்வர்' என்றும் செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்'என்றும். இலங்குநூல்கற்றோரோடு ஏனையவர் விலங்கொடு அனையர்' என்றும் கடிந்துரைக்கின்றார்.

கடவுளுக்கே சாபம்!

சாதாரண மக்களைமட்டும் அவர் வேம்பும் கடுவும் போன்ற வெய்யசொற்களால் தாக்கவில்லை. ஆண்டவனையே அவர் அவன் செய்கின்ற தவறுக்காகக் கண்டிக்கிறார்.

'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகிய ற்றியான்' என்று உலக முதல்வனையே அவர் சாடியிருக்கிறார் என்றால் சாதாரண மக்கள் எம்மாத்திரம்?

சீற்றத்தின் உச்சிக்கட்டம்

வள்ளுவர் வசைச் சொற்கள் பலவற்றைப் பயன்படுத்தியிருக்கின்ற இடங்களை எல்லாம் விட வசைச் சொற்கள் ஏதும் இல்லாத ஒரு குறளில் அவரது சீற்றத்தின் உச்சிக்கட்டத்தை நாம் காணலாம்.

கல்வியின் முக்கியத்துவத்தைக் குறிப்பாக மாணவர்கள் இளைஞர்கள் சமுதாயத்திற்கு வலியுறுத்தும் இடத்தில்தான் அவரது சீற்றம் உச்சிக்கட்டத்தை அடைகிறது. இத்துணைக்கும் அவர்இக்குறளில் ஏனைய குறள்களில் பயன்படுத்திய வசைச்சொற்கள் ஒன்றைக்கூடப் பயன்படுத்தவில்லை, ஆனாலும் கல்வி கற்பதன் அவசியத்தையும் கற்கவேண்டிய முறையையும், கற்றபடி நடக்கவேண்டியதன் காரணத்தையும் வலியுறுத்தஎண்ணும்போது இவற்றையெலாம் உணராதிருப்போருக்கு உறைக்கும் விதத்தில் கூறமுற்படுகிறார். இந்த இடத்தில் அவரது சீற்றம் தெற்றென வெளிப்படுகிறது. 'ஏ மாணவர் சமுதாயமே, இளைஞர்உலகமே நீஎன்னதான்செய்ய வேண்டும் என்பதைக் கேள் என்று அவர் கூறத் தொடங்குகிறார்;

'கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக'

இந்த ஏழு சொற்களிலும் வசைச் சொற்கள் ஏதும்இல்லைதான். எனினும் அவை ஒவ்வொன்றும் ஈட்டிபோன்றல்லவா நம்மைநோக்கிப்பாய்கின்றன? எங்கே வாய்விட்டு இன்னொரு முறை உரக்கப் படித்துப்பாருங்கள் உண்மை தெரியும். இரண்டு மூன்று முறை படிப்போமேயானால் நமக்கே கோபம் வந்துவிடும். இந்தியைப் போல் அடிவயிற்றிலிருந்து பிறக்கும் சொற்கள் தமிழில் இல்லை. இது நம் ஒலி இலக்கணத்தின் தனிச்சிறப்பு, எனினும் நமது மொழியிலும் வல்லெழுத்துக்கள் என்றபிரிவு உண்டு, மேலே உள்ள குறளைப் பாருங்கள். அதில் உள்ள ஒவ்வொரு எழுத்தும் வல்லெழுத்தாகும். ஏறக்குறைய இத்துணை வல்லெழுத்துக்கள் மிகுந்துவந்துள்ள வேறு குறளே இல்லை எனலாம்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

'குறள் நெறி'க்குக் கட்டண விவரம்

உள்நாட்டிற்கு ஆண்டுக்கட்டணம் உருபாய் 6/-
2 ஆண்டுக்கட்டணம் உருபாய் 10/-
மலேயா, இலங்கைபோன்ற வெளிநாடுகட்கும், நூல்நிலையங்கட்கும் ஆண்டுக்கட்டணம் உருபாய் 12/-
ஒரு ஆண்டுக்குக் குறைந்த கட்டணம் கிடையாது
விவரங்கட்கு : 'குறள்நெறி', மதுரை-6

குறள் நெறி

தமிழ் வாழ்க

மலர் 1 | கார்த்திகைத்திங்கள் 16 (1-12-64) | இதழ் 22

*இனத்தாற்றி எண்ணாத வேந்தன் சினத்தாற்றிச்
சீறின் சிறுகும் திரு.*

தேசீய மொழியும்
தொடர்பு மொழியும்.

தேசிய மொழி என்பது தமிழர்க்குத் தமிழே யாகும். பரதகண்டத்தில் வாழும் பல தேசீய இனங்களுள் தமிழினமும் ஒன்றாகும். தமிழினத்தைச் சேர்ந்தனவே தெலுங்கு, மலையாளம், கன்னடம் துளு முதலிய மொழிகள். ஆயினும் இவையும் தனித் தேசீய இனங்கள் என மதிக்கும் அளவுக்கு வளர்ச்சி பெற்றுள்ளனர் இம்மொழிகளைப் பேசுவோர்.

தமிழ் முதலிய மொழிகளைத் தேசீய மொழிகள் என அரசியல்அமைப்புச்சட்டத்தில்ஏற்றுக்கொண்டிருந்தும், வழக்கில் வட்டார மொழிகள் எனவும் பிராந்திய மொழிகள் எனவும் அரசினரும் பிறரும் வழங்குகின்றனர். 'இந்தி' மொழியை மட்டும் தேசீய மொழி என அழைக்கின்றனர். 'இந்தி' மொழி அதனைத் தாய்மொழியாக உடையோர்க்கு மட்டுமே தேசீய மொழியாகும். ஆகவே தமிழர்கள் தம்மொழியை வட்டாரமொழிஎன அழைத்தலை விடுத்துத் தேசீய மொழி என அழைத்தல் வேண்டும்.

இந்தி மொழியை இந்தியக்கூட்டரசின் அலுவல் மொழியாகவும் மாநிலங்களின் தொடர்புமொழியாகவும் ஆக்கிக்கொண்டுள்ளனர். 'இந்தி'யை மட்டும் இவ்வாறு கூட்டரசின் அலுவல் மொழியாகவும் மாநிலங்களின் தொடர்பு மொழியாகவும் கொள்ளுதலைப் பெரும்பான்மையோர் – இந்திமொழியினரல்லாதார்–விரும்பிலர். ஆயினும் 1965 சனவரி 26 முதல் 'இந்தி'மொழியே கூட்டரசின் அலுவல்மொழியாகவும் தொடர்பு (Link) மொழியாகவும் அரியணை ஏறப்போகின்றது.

அன்றியும் பரத கண்டத் தலைமையமைச்சரும் கல்வியமைச்சரும் ஆங்கிலத்தின் இடத்தில் 'இந்தி'யே அமரப்போவதாகவும், எல்லோருடைய (தாய்) மொழியாகவும் இருக்கப்போவதாகவும் கூறிவருகின்றனர். ஆகவே ஏனைய மொழிகள் வாழ்விழந்து உருக்குலைந்து மறையப்போகும்நிலைக்கு ஆளாக்கப்படுகின்றன என்பதில் எள்ளளவும் ஐயமின்று,

எனவே இந்திமொழி ஒழிந்த ஏனைய தேசீய மொழிகட்குரியார் அனைவரும் ஒன்றுகூடி இப்பேரிடரைத் தடுத்து நிறுத்துவதற்கு ஆவன செய்தல் வேண்டும். தமிழகத்தைப் பொறுத்த வரையில் இந்திமொழி முதன்மை எதிர்ப்புக் கிளர்ச்சி வலுப்பெற்று வருகின்றது. திராவிட முன்னேற்றக்கழகம் முன்னின்று நடத்திவருகின்றது. ஏனைய மாநிலங்களிலும் இக்கிளர்ச்சியைத் தொடங்கி நடத்துவதற்குரிய பொறுப்பையும் திராவிட முன்னேற்றக்கழகமே ஏற்றுக்கொண்டு செயல்புரிய வேண்டும். அனைத்து மாநிலத்தினரும் ஒன்றுகூடி எதிர்த்தாலன்றி இந்திமொழி முதன்மையைத் தடுத்து எல்லாத்தேசீய மொழிகட்கும் சமநிலை உரிமை அளித்தல் இயலாது. ஆகவே அனைத்து மாநில மொழியாளர் மாநாடு ஒன்றுகூட்டி அதன் வழியாக இந்திமொழிமட்டும் கூட்டரசு அலுவல் மொழியாகவும் ஆகப்போகும் நிலையைத் தடுக்கவேண்டும் என்று அறிஞர் அண்ணாவை அன்போடு வேண்டுகின்றோம் தமிழகத்தின் ஏனைய தலைவர்களும் தம் வேற்றுமைகளை மறந்து அறிஞர் அண்ணாவுடன் ஒத்துழைக்க வேண்டுமெனவும் விரும்புகின்றோம், 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே'' என்பது முற்றிலும் உண்மை என்பது வெளிப்படப்போகின்றது.

தமிழர்க்குத் தேசீய மொழி தமிழே; இந்தி ஒரு நாளும் தமிழரின் தேசீயமொழியாகாது. கூட்டரசின் அலுவல் மொழியாகவும் தொடர்பு மொழியாகவும் இந்தியை மட்டும் ஏற்றுக்கொள்ள இயலாது.

இன்று உலகத் தொடர்புக்கென ஆங்கில மொழி வேண்டும் என அனைவரும் கூறுகின்றனர். உலகத் தொடர்புக்காகவும் அறிவியல்முன்னேற்றத்திற்காகவும் ஆங்கிலத்தைக்கொள்ளும் நாம். அதனையே தொடர்பு மொழியாக (Link Language) க் கொண்டால் வரும் குற்றம் என்னையோ? ஆகவே ஆங்கிலமும் அவரவர் தேசீய மொழியும் அறிந்திருந்தால் போதுமன்றோ? ஆங்கிலம் அயல்மொழியென்றால் இந்தியும் ஏனையமொழியாளர்க்கு அயல்மொழி தானே.

ஆங்கிலத்தைத் தொடர்பு மொழியாகமட்டும் கொள்ளலாமேயன்றி அதுவே பாடமொழியாகவும் ஆட்சிமொழியாகவும் இருக்கவேண்டுமென்று நாம் கூறவில்லை. ஆங்கிலேயர் ஆட்சி மறைந்தும் ஆங்கில மொழியின் ஆட்சி இன்னும் நீங்காமலிருப்பது மிக மிக வருந்தத்தக்கது. ஆகவே ஆங்கில மொழியின் ஆட்சியும் அகலப்பாடுபடல் வேண்டும். தமிழ் நாட்டில் தமிழே எல்லாத்துறைகளிலும் முதன்மை பெற்று விளங்கவேண்டும். அஃதே தமிழரின் தன்மானத்துக்கும் சிறப்புக்கும் எடுத்துக்காட்டாகும்.

"தமிழர்க்குத் தேசீயமொழி தமிழே, மாநிலத் தொடர்புக்கும் உலகத்தொடர்புக்கும் இப்பொழுதுள்ள சூழ்நிலையில் ஆங்கிலமே'' என்பதைத்திட்டவட்டமாக அறிவித்தல் வேண்டும். "அரசினரின் மொழியாக அரசியலார் மொழியாக, அரசியல்சார் வரிசையுறுமொழியாகத்திருமலிந்ததமிழ்மொழிதான் ஆகும் வகை'' நம் தமிழ்மக்கள் ஒன்றுசேர்ந்து தொண்டு செய்யவேண்டுமென உள்ளன்போடு வேண்டுகின்றோம்

தமிழ் மாநிலம் சிறக்கவும் இந்தியக்கூட்டரசு ஏற்றம்பெற்று விளங்கவும் ஒல்லும் வகையால் உழைப்போம்.

தேர்வுமுறையில் திருத்தம்

கல்வி நிலையங்களில் கற்கும் மாணவர்களின் புலமைச்சிறப்பை அளந்து அறிவதற்கு இன்று நடத்தப்படும் தேர்வுகள் பலவகைகளில் குறைபாடுடையன என்பதில் ஐயமில்லை. புலமையை அறிவதற்குத்தேர்வுகள் என்ற நிலை மாறித் தேர்வுகளில் வெற்றிபெறுவதற்குப் புலமை பெறுதல் என்று உண்டாகிவிட்டது. ஆதலின் தேர்வுகளில் முதன்மையாக வெற்றிபெறுவோர்களில் பலர் புலமைக் குறைபாடுடையவர்களாக உள்ளனர். அன்றியும் தேர்வுக்கென ஆயத்தம் செய்வதே கல்வித்திட்டத்தின் குறிக்கோள் என்று ஏற்பட்டுவிட்டதனால், மாணவர்க்கும்ஆசிரியர்க்கும்உள்ள உறவும் ஒழுங்கு கட்டுப்பாடு முதலியவற்றில் உறுதிப்பாடும் விரும்பத்தக்கனவாய் இல்லை. ஆகவே தேர்வுக்காக ஆயத்தம் செய்வதே கல்விநிலையங்களின் கடமை என்பது மாறுதல் வேண்டும். வாழ்க்கைக்காக ஆயத்தம் செய்வதே கல்விநிலையங்களின் கடமை என்பதைக் குறிக்கோளாகக் கொள்ளல்வேண்டும். அங்ஙனமாயின் ஆண்டு இறுதியில்நடத்தப்படும் தேர்வுகளை மட்டும் கொண்டு மாணவர்களின் புலமைநலனை அளந்தறிதல் கூடாது. மாணவர்கள் ஆண்டுமுழுவதும் வகுப்புகளிலும், வகுப்புக்கு வெளியிலும் நடந்துகொள்ளும் முறை, நாள்தோறும் பாடங்களில் காட்டிவரும் ஆர்வம், வாரத்தேர்வு, திங்கள் தேர்வுகளில் பெறும்மதிப்பு எண்கள், ஆசிரியர்களுடனும் ஏனைய மாணவர்களுடனும் நடந்துகொள்ளும்முறை, கலைத்துறை, விளையாட்டுத்துறை, பொதுநலத்தொண்டுத்துறை முதலியவற்றின் மாணவர் பெற்றிருக்கும் ஈடுபாடுமுதலியனவற்றை ஆராய்ந்து ஆண்டுத் தேர்வில் பெறும் மதிப் பெண்களையும் உளத்தில்கொண்டு மாணவர் தகுதி நிலையை ஆராய்ந்து பட்டம் அல்லது சான்றிதழ்கள் அளிக்க வேண்டும். இவ்வாறு செய்யின், மாணவர்கள் வருங்காலப்பெருவக்களாகச் சிறந்து விளங்குவதற்குரிய முறையில் கல்விப்பயிற்சி பெறுதல் கூடும். கல்வி நிலையங்களில் இப்பொழுது ஆங்காங்குத்தோன்றும் ஒழுங்கு முறைக்குறைபாடும் மறைந்து ஒழியும்.

நாட்டுக்கு நல்லன புதியனசெய்வதில் தணியா ஆர்வமும், விரைந்துதிட்டங்கள் தீட்டிச்செயல்படுத்தும் திறனும், எல்லாராலும் போற்றப்படும் இனிய பண்பும் மிக்க நம் தமிழ் மாநிலக் கல்வித்துறை இயக்குநர். அமெரிக்காவுக்குச் சென்றுவந்தபின்னர்உயர் நிலைக்கல்விக்கூடங்களில் நடைபெறும்தேர்வுமுறைகளை மாற்ற முன்வந்திருப்பது மிகவும் பாராட்டிவரவேற்கத்தக்கது. அனைவரும் ஒத்துழைத்து விரைவில் வெற்றிபெறச் செய்தல்வேண்டும். இத்திட்டத்தைக் கல்லூரிகட்கும் உடனே கொண்டுவந்து செயல்படுத்துதல் வேண்டும் எனவிரும்புகின்றோம்

மதுரை மாவட்டத்தில் முந்நூறு கல்விக்கூடங்களில் மட்டும்தான் முதலில் இத்திட்டம் கொண்டு வரப்படும் என்று அறிகின்றோம். ஆறும் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு முடியத்தான் இத்தேர்வுத் திட்டத்தால் மாணவர்கள் பயன்பெறுவர் என்று தெரியவருகின்றது. நல்ல திட்டமாய இதனைநாடெங்கும் எல்லாக்கல்வி நிலையங்களிலும் கல்லூரிகளிலும் உடனே செயல்முறைக்குக் கொண்டுவருதலே நன்று. நல்லதை இன்றே இன்னே செய்தல்வேண்டும். ''செயத்தக்கச் செய்யாமையானும் கெடும்''

புகுமுக வகுப்பில் புகுத்துகத் தமிழை

புகுமுக வகுப்புகளில் (**Pre-university**) ஆங்கிலத்தில் கற்பிக்குங்கால் தமிழினும் பேச்சுத் - தமிழினும்- கற்பிக்கலாம் எனப் பல்கலைக்கழகத்திலிருந்து கல்லூரிகட்கு அறிவுரைக் குறிப்பு வந்துள்ளது உயர் நிலைக்கல்விக்கூடங்களில் தமிழிற் பயிலும் மாணவர்கள் கல்லூரிகட்குள் நுழைந்ததும் அயல் மொழியாம் ஆங்கிலத்தில் கற்பிப்பதை அறிந்து கொள்ள முடியாமல் இடர்ப்படுகின்றனர் என்பது நாடு அறிந்த ஒன்றாகும். தமிழ் நாட்டின் ஆட்சி மொழி தமிழ் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டபோதே கல்லூரிப் பாடமொழியும் தமிழ்தான் என்று சட்டம் செய்திருக்க வேண்டும்.

B. A. வகுப்புகளில் விரும்புவோர் கலைப் பாடங்களை (**Arts**) தமிழிற் படிக்கலாம் என்று கூறிவிட்டுத்தமிழ் நாட்டுஅரசில் பணிபுரிய விண்ணப்பம் செய்வோர் தமிழறிவுபெற்றிருக்கவேண்டிய கட்டாயமில்லைஎன்றுகூறிவிட்டுத்தமிழ்ப் புலமையைத் தாழ்வாக மதிப்பிடுவோரையும் தமிழறிவேஇல்லாதவரையும் அரசினர் முதன்மைப்பதவிகளில் அமரச் செய்து விட்டு, தமிழ்வழியாகப் படித்தால் வேலை வாய்ப்பு இல்லை என்று பறையறைந்து கொண்டு, தமிழ் வழியாகப் படித்தலை விரும்பாதவர்களைக் கல்லூரி முதல்வர்களாக வைத்துக் கொண்டு. '' தமிழ் வழியாகப் படிக்க மாணவர்கள்வந்திலரே '' என முதலைக் கண்ணீர் வடிப்பது பொருந்தாது. உயர்நிலைக் கல்விக் கூடங்களில் தமிழைப் பாடமொழியாக ஒரே சமயத்தில் ஒரே ஆணையால் ஆக்கியது போல் கல்லூரிகளிலும் தமிழைப் பாடமொழியாக ஆக்கச சட்டம் பிறப்பித்தல் வேண்டும். புகுமுக வகுப்பில் தமிழில்தான் பாடங்கள் கற்பிக்கப்படும் என்று அறிவித்து ஆணை பிறப்பிப்பதைவிடுத்து, ஆங்கிலம்தான் பாடமொழி என்று வைத்துக்கொண்டு பேச்சுத்தமிழினும் சொல்லிக் கொடுக்கலாம் என்பது பொருந்தாது. புகுமுக வகுப்பில் ஆங்கிலத்தைப் பாடமொழியாக வைத்துக்கொண்டு (**B. A.**) இளங்கலை வகுப்பில் விரும்புவோர் தமிழிற் படிக்கலாம் என்று கூறிவிட்டு மாணவர் அதற்கு வாராத சூழ்நிலையை அமைத்துக் கொண்டிருப்பது அறமாகாது: தமிழ் வழியாகப் படிப்பது தக்கது என்பதை ஒப்புக்கொண்டது ஆகாது.

ஆகவே கல்வியமைச்சர் அவர்கள் மாணவர் நலத்தினும் நாட்டு நலத்தினும் கருத்துக்கொண்டு கல்லூரியிலும் தமிழ் வழியாகப் படிக்கும் திட்டத்துடனே கொண்டுவர வேண்டுகின்றோம். பலர் விருப்பத்துக்கு மாறாக மது விலக்குச் சட்டம் இயற்றும்அரசு சிலர்விருப்பத்துக்கு மாறாகத் தமிழைப் பாடமொழியாக்கும் சட்டத்தை ஏன் கொண்டு வருதல் கூடாது. உயர் நிலைப் பள்ளிக் கூடத்திற்குத்துணை செய்த துணிவும் அறிவும் இதற்குத் துணை செய்யாமை ஏனோ ?

"துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை ''

நலமுறவேண்டுமெனில்...?

— இரிசியூர் இளவரசன்

‘சேம முற வேண்டும் எனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்’ ... எனத்தமிழ் மக்களைப் பார்த்து முழங்கினார் பாவலர் பாரதியார். ஏன் இங்ஙனம் பாடினார்? தமிழ் நாட்டின் தமிழர் வீதியில் தமிழ் முழங்கிக் கொண்டுதானே இருக்கிறது. இருப்பினும், ‘தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர், தமிழ்ப் பெரு மக்களே!’ என வேண்டினாரே, எற்றுக்கு? சேமமுற வேண்டுமென்றால் செந்தமிழ் செழிக்க வேண்டும் என்றாரே, இஃது எங்ஙனப் பொருந்தும்? தாய் மொழிக்கும், தமிழன் வாழ்வுக்கும் என்ன உறவு? தாய் மொழியின் செழிப்பே தமிழனின் வள வாழ்வா? இதுபோலும் வினாக்களை எழுப்பி விடை காணச் சிந்திப்போமாயின், ‘செந்தமிழ் வாழ்ந்தால்தான் மறத்தமிழன் வாழ்வான்’ என்ற முடிவுக்கு வருவோம். ‘தமிழே தமிழனின் உயிர்’ என்பது இயற்கையான பின், தமிழன் வாழ வேண்டுமெனில் தமிழ் வாழ வேண்டும் எனத் தெளிதல் வேண்டும்.

பன்மொழிகளைக் கற்றவரான பாரதியார், எம்மொழிகளிலும் சுவைக்க முடியாத இனிமைகளை செந்தமிழ்த் தேனில் சுவைத்தார். உலக மொழிகளில் மூத்த மொழியாம் முத்தமிழ் மலரின் இளமை குன்றா எழிலைக் கண்டு வியந்தார். உயர் தனிச் செம்மொழியாம் பைந்தமிழ்ச் சோலையைப் பார்த்து வீறு கொண்டார். எண்ணற்ற பெருஞ் சிறப்புகளுடைய தண்டமிழைத் தாய் மொழியாகப் பெற்றிருக்கும் பெருமையில் உலகத்தையே பார்த்து முழங்கினார், ‘யாமறிந்த மொழிகலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்...’ என ஆனால்...அந்தோ! விண்ணதிரப் பெருமைக்குரல் எழுப்பிய பாரதி, மறுகணமே உளம் சோர்ந்தார்; கண் கலங்கினார்; ஒப்பிலா தெய்வத்தமிழ் – முழங்க வேண்டிய தமிழ் மண்ணில்– செழிப்பூட்டக் கடப்பாடுடைய தமிழ் மக்களால் ஒதுக்கப்பட்டு - பிறமொழிக் கொடுமைகளில் இனிமை குன்றி- தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் எனும் பெருமைக்குப் பொருந்தாது - வெறும் ஏட்டுத் தமிழாக வாழ்ந்து வரும் அவலக் காட்சியை எண்ணித் துடித்தார்; ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய் வாழும் உணர்வற்ற தமிழுடலங்களை நோக்கிக் கெஞ்சினார். ‘தமிழன் நலமுடன் வாழவேண்டுமென்றால், தமிழ் முழங்க வேண்டும்; செந்தமிழ் செழித்துச் சிறப்புற வேண்டும்...’ என.

அன்று... பாரதி வாழ்ந்தபோது, சமசுக்கிருதமும் ஆங்கில மொழியுமே தமிழுக்குப் பகை மொழிகள். இவற்றால் தமிழுக் குற்ற கேடுகள் கணக்கிலடங்கா. இக்கேடுகளை ஒழிக்க முயலாத தமிழர்கள், உடம்பில் பற்றிக் கொண்ட பெரும் பிணியைஉணரா மூடராய் வாளாயிருந்தனர்; அதுவுமின்றி பற்றிய பிணியை வளர்க்கவும் வாழ வைக்கவும் துணை நின்றனர். தமிழை ஒடுக்க தமிழனே முன் நிற்கும் அவல நிலை! தாயைக் கொல்லும் தமிழ் மகனும் உண்டோ? என்னே கொடுமை!

வடமொழியை தெய்வ மொழியென நம்பி, தீயோரின் பொய்யுரைகளை மெய்யெனக் கேட்டு, தமிழின்சுவை மறந்து சமசுக்கிருதத்தை வணங்கினான்; ஆட்சியேற்ற ஆங்கில மொழியை அன்னியர்மொழியென்றும் கருதாது ஆளும் திறமுள்ள நன் மொழியெனப் போற்றி ஆற்றல் மிக்க அருந்தமிழை ஒதுக்கினான். சொல்லிலும் செயலிலும், சமசுக்கிருத–ஆங்கிலக் கலப்பால் தாய்மொழிக்கும் தமிழ் மரபுக்கும் தீ மூட்டிக்கொண்டிருந்த தமிழுருவங்களைப் பார்த்துத் துடித்தார் பாரதி! ‘ஊமைகளே!’ என்று, உரிமையை இழந்தும் வாய்திறவாது மரம்போல் நின்ற தமிழர்களை ஏசினார்; ‘செவிடர்களே!’ என்று செந்தமிழ் மறந்த தமிழ்த் துரோகிகளைச் சாடினார்; ‘குருடர்களே!’ என்று, தம்மை வாழவைக்கும் தமிழ் மண்ணை மதியாக் கயவர்களைத் தூற்றினார்.

இன்று...? அன்று. தமிழ்ச் சோலையில் முளைத்த முட் செடிகளில், சமசுக்கிருதம்செத்து விட்டது; பட்ட செடியைக் களைந்து தூய்மைப் படுத்தி அரும்பணியாற்றி வருகின்றனர் தமிழ்ச் சான்றோர்கள். ஆங்கிலேயனோ ஓடிவிட்டான்; சில நன்மைகளும் பல கேடுகளும் விளைவித்த ஆங்கிலத்தை இருக்க விரும்பினால் இருக்கும்; வெறுத்து ஒதுக்கினால் தொல்லை கொடுக்காது, விரும்பாதாரை வேதனைப் படுத்தாமல் விலகி விடும்.

ஆனால்..? உரவாகவந்து பகையாகிய பிற மொழிகள் தமிழ்த் தாயை மாசு படுத்தினவேயன்றி வெல்ல முடியவில்லை. தோல்வியுற்ற அம்மொழிகளைக் கண்டு எள்ளி நகைக்க வேண்டிய நேரத்தில், ‘இதோ வந்து விட்டேன்’ என முழங்கிக் கொண்டு வந்து விட்டது மற்று மோர் தீயமொழி! முன்பு வந்தவை எளிய பகைகள்; இப்போது வந்திருப்பதோ கொடும் பகை! இந்தியெனும் பெருநோய் பொன்னுடலை உருக்குலைக்கும் நஞ்சு! அரசினரின் மக்களாட்சிக் கொள்கைக்கு நற்சான்றுதான் இந்த இந்தி-நஞ்சு! தமிழ்ச் சோலையில் கள்ளி முளைத்து விட்டது; மொழி வெறியர்களின் பிடிவாதத்தால் செழிப்புறப் போகிறது கள்ளிக்காடு: உரமிட்டு ‘நீரூற்றிக் கண்காணிப்பாக வளர்க்க முற்பட்டு விட்டது காந்தீயம்’ போற்றும் பேராயக் கட்சி! தமிழ்ச் சோலையில் கள்ளிக்காடா? என்னே கொடுமை! என்னே மனிதவினம்? இப்பொல்லாத நேரத்தில் பாரதியிருந்திருந்தால் எப்படிச் சாடுவாரோ? எது பாடினாலும், இந்தியனோடு ஒன்று பட்டு வாழ மட்டும் பாடவே மாட்டார்! முன்பு பாடினமைக்காக வெட்கியுமிருப்பார்!

மக்களாட்சியின் மொழிச் சூதாட்டத்தை விட்டுவிட்டு, தமிழர்களின் தாய் மொழிப் பற்றினை நோக்கின் மேலும் வேதனை தான். உலகமே வியந்து போற்றும் உயர் தனிச் செம்மொழியைத் தாய் மொழியாகக் கொண்டிருக்கும் பெருமையில் மகிழாத தமிழர்களே பெரும்பாலோர்! தமிழின் சிறப்பறியாச் சிறுமையினாலோ அன்றி தாய்மொழியின் உயர்வு மறந்த கொடுமையினாலோ, அன்று பாரதி காலத்தில் இருந்ததைவிடப்பன் மடங்கு, இத்தகைய போலித் தமிழர்கள் பெருகி விட்டனர்.

பிறமொழிக் கலப்பினை ‘நாகரிகம்’ யென்றெண்ணி வடசொற்கலந்த தமிழிலும், ஆங்கிலம் மேலோங்கிய தமிழ் உரையாடல்களும் செய்து பெருமையுறும் தமிழர்களே அதிகமாவர். நாளுக்கு நாள் மாறிவரும் உடையலங்காரங்களைப் போல், பழக்க வழக்கங்களைப் போல், தமிழ் மொழியிலும் மாற்றம் செய்து எழுதியும் பேசியும் களிக்கின்றனர். உடைகளைப் போலும், பிற ஒப்பனைப் பொருள்களைப் போலும் தமிழையும் எண்ணி விட்டனரோவென வாட வேண்டியிருக்கிறது, இன்றைய தமிழர்களின் போக்கினைக் காணும் போது. பிறமொழிச் சாக்கடை நீரில், சந்தனத் தமிழைக்கலப்பதில் முன்னிற்போர் யாவரும், கற்ற தமிழர்களே! இவர்கள் கற்ற கல்வியின் பயன் இதுவோ வென்றும். ஆங்கிலக் கல்வியில் பட்டம் பெற்று விட்டதால், ஆங்கிலேயனைப் போல உடையுடுத்திக் கொண்டமையால். அருந்தமிழ் மறந்து தாய்மொழிப் பற்றற்று, ‘குட்மார்னிங்’ சொல்லி வணக்கம்’ மறந்து. ‘கவ்டூயூடு’ என்று ‘நலமா?’ எனப் பேசுவதொழித்து. கல்லோ .. ஓகே... ஊசி.. என்பன போன்று தமிழனே தமிழனோடு உரையாடி மகிழ்கின்றானே, இத்தகையவன் ‘தமிழனா?’ அல்லது ‘ஆங்கிலத்-தமிழனா?’ எனக் கேட்கத் துடிக்கிறது தமிழுள்ளம்! இன்று இந்த நிலை.. நாளை? ‘இவன் இந்தித்-தமிழனா?’ எனக்கேட்கும் நிலைமையே வரும். ஆட்சியாளர்களின் இந்தி வளர்ப்புப் பணிகள் செவ்வனே அதிவிரைவாக மேலோங்கி வருவதாலும், இந்தப்பொல்லாத நேரத்தில் ஆட்சியில் - தமிழர்கள் தாய் மொழிப்பற்றிழந்து, தமிழன்னையைச் சூழும் கொடு நோய்களைப் போக்க முயலாது வாழ்வதனாலும், நாளைய தமிழ்நாட்டு மக்கள் தமிழர்களாக இருப்பார்களா? வாழ்வார்களா? தமிழ் மரபு மங்காது நிலைக்குமா?... எனப் பல்வேறு எண்ணங்களால் அஞ்ச வேண்டியிருக்கிறது.

நல்லதோ சமூகத்தின் சிறப்புகளை, அச்சமூகத்தின் தாய் மொழியே நன்கு விளக்கும். ஒரு மொழியின் இலக்கணம் இலக்கியம். முதலான வற்றை ஆராய்ந்தால், அம்மொழிக்குரிய மக்களைப் பற்றிய அனைத்தும் தெரிந்து கொள்ளலாம், எடுத்துக்காட்டாக. நாடோடிகளாய் வாழும் நரிக்குறவர்களையும் அவர்களுடைய மொழியையும் நோக்கினால், தாய் மொழிக்கும் - சமூகத்தின் சிறப்புகளுக்கு முள்ள உறவுகள் தெளிவுறும். இவ்வுண்மையை அறிந்த தமிழர்கள் பலர்; அறியாதோர் அறிய விரும்பாதோர் எண்ணற்றோர். இந்த எண்ணற்றோர் கலப்புத் தமிழில் பேசி மகிழ்வதை - எழுதியின்புறுவதை

(15ஆம் பக்கம் பார்க்க)

திருவள்ளுவர் தமிழ்க்கல்லூரி

9—11—64 அன்று பேராசிரியர் டாக்டர் சி. இலக்குவனார் ஆற்றிய சொற்பொழிவு.

சென்னை. ஈக்கீரர் கழகத்தின் சார்பாக நடந்து வரும் திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரியில். 9—11—64 அன்று கல்லூரி முதல்வர் திரு பழநி பாலசுந்தரனார் அவர்கள் தலைமையில் குறள்நெறி ஆசிரியர் **பேராசிரியர் டாக்டர் சி. இலக்குவனார் அவர்கள் "தொல்காப்பியம்"** எனும் பொருள் பற்றிச் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினார். அது சமயம் சொற்பொழிவுக்கு வந்திருந்த அறிஞர் பெருமக்களைத் திரு சிறுவை நச்சினார்க்கினியன் அவர்கள் அன்புடன் வரவேற்றார்.

பின்னர்த் தலைவர் திரு. பழநி பாலசுந்தரனார் அவர்களின் முன்னுரைக்குப்பின், திரு. சி இலக்குவனார் அவர்கள் பேசத் தொடங்கினார் :

தொல்காப்பியம் என்ற நூலுக்குத் தொல்காப்பியன் என்ற பெயரே பொருத்தமாயிருக்கிறது என்று நாவலர் சோமசுந்தர பாரதியார் கூறுவாரேயெனினும், நூலுக்கு ஒரு பெயரும் நூலை ஆக்கியவனுக்கு ஒரு பெயரும் இருத்தல் வேண்டும் என்பது துணிபாம் மேலும், அவர் "தொல்காப்பியம்" என்று நூலுக்கு பெயராய் அமைந்தது வட நூல் மரபு என்றும் கூறுவார் எனினும் நூலுக்குத் தொல்காப்பியம் என்பதும் அதையியற்றியருளிய ஆசிரியருக்குத் தொல்காப்பியன் என்ற பெயர் பிற்காலத்தில் ஏற்பட்டு இருக்க வேண்டும் என்பது எனது கருத்தாகும்

தொல்காப்பியர் பழந்தமிழர் என்பதில் ஐயமில்லை. ஆனால் அவரைச் சமணர் என்று சிலர் சொல்லுகின்றனர். சமணர்கள் தெய்வதத்திற்கு முதன்மை வழங்குவதில்லை. ஆனால் தொல்காப்பியரோ. 'சேயோன்மேய காடுறை உலகம்" என்றும் 'தெய்வம் உணாவே மாமரம்"என்றும் தெய்வத்திற்கு முதன்மை கொடுத்திருக்கின்றார். எனவே தொல்காப்பியர் சமணர் அல்லர் என்பது தெளிவாகிறது. மேலும், சமணர், பௌத்தர் ஆகியோரின் காலத்திற்கு முற்பட்டவர் தொல்காப்பியர். யவனர் என்ற சொல் தமிழில் தோன்றுவதற்கு முன்னர்த் தொல்காப்பியர் வாழ்ந்தவராவார். கி. மு 6 ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் நாணயம் பழக்கத்திற்கு வந்ததாகக் கூறுகின்றனர். நாணயத்தைப் பற்றிய குறிப்புத் தொல்காப்பியத்தில் யாண்டும் இல்லை. எனவே, நாணயம் பழக்கத்திற்கு வரும் முன்பே தொல்காப்பியர் வாழ்ந்திருந்தார் என்றும் தெரிகிறது.

வடசொல் தமிழில் கலப்பதற்கு இலக்கணம் செய்தவர் தொல்காப்பியர். அவர் தம் நூலில், என்ப என்றும் 'என்மனார் புலவர்' என்றும். தமக்கு முன் பிருந்தோர் கூறியவற்றைக் குறிப்பிடுவர்' தம்மால் கூறப்படுவதற்கு அவ்விதம் கூறுவது கிடையாது. தமிழில் ஆரியச்சொல் கலப்பதற்கு விதி வகுத்தவர் தொல்காப்பியரே என்பது.

வடசொற் கிளவி வடவெழுத்
தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா
கும்மே

எனும் நூற்பாவால் அறியலாம் அவர் காலத்தில்தான் ஆரியச் சொற்கள் தமிழில் வந்து கலந்தன என்று தெரிகிறது. கி மு. 10 நூற்றாண்டு தொடங்கி, வடவர்கள் தமிழகத்திற்கு வரத் தொடங்கினார்கள் கி. மு. 6 நூற்றாண்டில் நாணயம் பழக்கத்திற்கு வந்தது. எனவே தொல்காப்பியர் இவ்விரு கால எல்லைக்கு இடைப்பட்டவர் என்பது தெளிவாகும்.

வட இந்திய மொழிகளில் ஆரிய மொழிச் சொற்கள் மிகுதியாகவும் தமிழ்மொழிச் சொற்கள் குறைவாகவும் கலந்திருந்ததால் வட இந்திய மொழிகளை ஆரிய மொழியென்றும் தென்னிந்திய மொழிகளில் தமிழ் மொழிக் கலப்பு மிகுதியாக இருப்பதால் அவைகளைத்திராவிட மொழிகள் என்றும் மொழி நூல் வல்லுநர்கள் கூறுகின்றனர். ஒரு காலத்தில் தமிழ் மொழி இமயம் முதல் குமரி வரை வழங்கியிருந்தது.

வடமொழியிலுள்ள எழுத்துகள், தமிழில் உள்ள எழுத்துக்களாவே இருக்கின்றன. ஆனால் வரிவடிவம் மட்டும் வேறு பல எழுத்தொலிகள் (25) இருமொழிக்கும் பொதுவாகவே இருக்கின்றன. ஆனால், ஆரிய மொழியிலிருந்தே, தமிழர் தம்மொழி நெடுங்கணக்கை அமைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று மொழியியல் வல்லுநர்கள் கூறிவிட்டனர், இப்பொழுது அறிய வேண்டியது கடன் வாங்கியது தமிழர்களா? அல்லது வடமொழியாளர்களா?என்பதே

வடமொழியாளர்கள், தமிழர்களோடு கூடுவதற்கு முன்னர், அவர்களுடைய மொழியை எழுதுவதே கிடையாது. சுருதி என்றாலே கேட்பது என்று பொருள். ஆகவே வேதம் எழுதப்படாமல் இருந்தது என்று அறியலாம். ஆகவே அவர்கள் தமிழர்களோடு கூட்டுறவு கொண்ட பின்னரே. தம் மொழிக்கு ஒரு வடிவத்தைத் தேடிக்கொண்டிருக்க வேண்டும் என்பது முடிவு.

இதற்கிடையில் சிலர், தொல்காப்பியர் வடமொழியைப் பயின்ற பின்னரே தொல்காப்பியத்தை இயற்றினார் என்பர். வடமொழி இலக்கணமான பாணினீயம் என்பது சமையலறை போன்றது. மிளகாய் புளிபருப்பு முதலிய பொருள்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாய்ச் சிதறிக் கிடக்கும் அதில் நமக்குத் தேவையானவற்றைத் தேவையான அளவு எடுத்துக் கொண்டு பயன்பெற வேண்டும். ஆனால் தொல்காப்பியம் அப்படியன்று: இயல் இயலாக, அதிகாரம் அதிகாரமாகப் பகுக்கப் பெற்றுச் செவ்விய முறையில் ஆக்கப்பட்டுள்ளது. எனவே, தொல்காப்பியர், வடமொழியைக் கற்றுத்தான். தொல்காப்பியத்தை இயற்றினார் என்பதற்குச் சான்று ஒன்றும்மில்லை. தொல்காப்பியம் பாணினிக்கு முற்பட்டது. வேற்று மொழியைக் கற்க வேண்டா என்று யாரும் சொல்லவில்லை. வசதிக்கேற்றவர், வாய்ப்புக்கேற்றபடி மொழிகளைப் பயில வேண்டும், எனவே தொல்காப்பியர் ஐந்திரம் முதலிய இலக்கண நூல்களைப் பயின்றதில் தவறு ஒன்றும் இல்லை

தமிழர்களுக்கும் நால்வகை வருணத்திற்கும் சற்றும் தொடர்பில்லை. மேலும் தொல்காப்பியத்தில் மரபியலில் நால்வகை வருணத்தைப் பற்றிக் கூறுவது அத்தனையும் இடைச்செருகலேயாகும் புல், புள் மா முதலியன பற்றி மரபியலைக் கூறிவந்த தொல்காப்பியர் ஏன் திடீரென்று நால்வகை வருணத்தைக் கூறவேண்டும்? அப்படிச் சொல்ல வேண்டுமெனில் அதை அவர் புறத்திணையியலில் சொல்லியிருக்க வேண்டும், எனவே அது இடைச்செருகலன்றி வேறில்லை,

தமிழுக்கு 247 எழுத்துக்கள்என்று கூறுகிறார்கள். ஆனால் ஒலி வடிவம் பெற்ற எழுத்துக்கள், முதல் எழுத்தாக முப்பதும், சார்பெழுத்தாக மூன்றும்தான் ஆனால், வரிவடிவம் முப்பத்தொன்றே. உயிரையும் மெய்யையும் சேர்த்து எழுதிய அன்றைய தமிழர்களின் மதி நுட்பம் வியக்கத்தக்கது.

இனி எழுத்தும் சொல்லும் கற்றுப் பொருளதிகாரத்தைக் கற்க புகுகின்றோம். இலக்கியத்திற்கு அடிப்படை, மக்கள் வாழ்வும் இயற்கையுமே களவும், கற்பும் மக்கள் வாழ்வில் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கின்றன. எனவே, அவர்களது மொழியும் வாழ்வும் சிறந்திருந்தன. இத்தகைய கூறுபாட்டை நாமும் கடைப்பிடித்து, மொழியும், இலக்கியமும், பொருளும், வளர்த்து மகிழ்தல் வேண்டும். மேலும், இலக்கியத்தை ஆராய்வதற்குப் பொருள் அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

ஆனால் பிற்காலத்தவர் எழுத்தும் சொல்லும் ஒரு பகுதியாகவும் யாப்பு, அலங்காரம், அகப்பொருள் புறப்பொருள் என வெவ்வேறு பகுதிகளாகவும் யாப்பு, தண்டி என இவற்றிற்குத் தனித்தனியே பெயரிட்டுத் தொல்காப்பியத்தைப் பிரித்து விட்டனர். தொல்காப்பியரோ' எழுத்து சொல், பொருள் என்று ஒன்றிற்கொன்று தொடர்புடனே நூல் யாத்துள்ளார்.

அடுத்து இறுதியாக, அண்மையில் நடந்த நடுநிலையாளர்கள் மாநாட்டில் நாசர் தன் தாய்மொழியில் பேசினார். அகில இந்தியக் காங்கிரசுக் குழு தலைவர் காமராசர் கூடக் காங்கிரசு மாநாடுகளில் தாய் மொழியிலேபேசியிருக்கிறார், எனவே நாமும், நம் தாய்மொழிக்கு முதலிடம் தந்து தமிழ் மொழியைக் காத்துப் போற்ற வேண்டும்,

ஆங்கிலமும் இந்தியும்

— மே. சி. சிதம்பரனார்

ஆறாயிரம் கல்கட்கப்பாலுள்ள அயல் நாட்டு மொழியான ஆங்கிலத்தை விரும்புவதும், உள்நாட்டு மொழிகளிலொன்றான இந்தியை வெறுப்பதும் தான் நாட்டுப் பற்றா? என்பது பரவலான கேள்விகள்.

(ஆங்கிலம் அயல் நாட்டு மொழியெனில், இந்தியும், இந்தோ ஐரோப்பியக்குழு மொழிகளின் வாயிலாக முளைத்ததால் அயல் நாட்டு மொழிதான். இந்தி உள் நாட்டு மக்களாற் பேசப்பட்ட ஒரு மொழியெனின், ஆங்கிலமும், பல இலட்சக்கணக்கான உள் நாட்டு மக்கள் (இந்தோ ஐரோப்பியர்) தாய் மொழியாகக் கொண்டு பேசப்படும் மொழிதான் 'நாட்டுப்பற்று' என்பது? நாட்டின் முன்னேற்ற வழிகட்குத் தம்மாலியன்ற அளவு முயற்சிக்கும் ஆர்வத்துக்குந்தான் நாட்டுப்பற்று என்ற பெயர். மொழிப்பற்று என்பதும் அதன் வளர்ச்சிக்குத் தம்மாலியன்ற தொண்டுபுரியும் ஆர்வமாகும்.)

ஆங்கிலம் உலகமொழியாகப் பரவியது, உலகத் தொடர்பு கொள்வதற் கேற்றது; அறிவியல் வளர்ச்சியை உண்டு பண்ணுவது; நாட்டின் முன்னேற்றத்திற்குதவுவது, நம்நாடு தன்னுரிமையடைய உதவியது; உலகமொழிகளில் உச்சநிலை பெற்றது; எந்நாடும் இன்றைய நிலையில் அதனைப்படித்தறியும் இன்றியமையாமை பெற்றது; ஆதலின் அதனை விரும்புவதியல்பாகிவிட்டது.

இந்தி உலகமறியாதது; உலகத்தொடர்பிற்கேலாதது; அறிவியல் வளர்ச்சியைத் தேய்ப்பது; நாட்டின் பின்னேற்றத்திற்குதவுவது; தன்னாட்சியின் ஒருமைப்பாட்டைச் சிதைப்பது; மாநிலமொழிகட்கெல்லாம் அடித்தட்டில் கிடப்பது; ஒரு நாடும் படித்தறிய முன்வராதது. ஆதலின் அதனையும், அதை ஆட்சி மொழியாக்கும் பணியையும் வெறுப்பதியல்பாகி விட்டது என்பது பரவலான விடைகள்.

ஆங்கிலம், இந்தி என்ற இருமொழிகளும் தமிழர்க்கு வேற்று மொழிகளே எனினும் தமிழர் இந்தியை வெறுக்குமளவு ஆங்கிலத்தை வெறுப்பதில்லை. 'இந்தி ஒரு முன்னேற்ற மொழியன்றுதான். எனினும் எதிர்காலத்தில் தகுதி பெற்றுவிடும். ஆட்சி மொழியாக இருக்கட்டுமே" எனப்பெரிய பெரிய நிலையிலுள்ளோர் கூறினும் தமிழருள்ளங் கசப்பேறுவதுடன் அச்சமும் கொள்கின்றனர். அவ்வளவு மட்டுமல்ல "ஆங்கிலேயர் நம்நாட்டில் விட்டுச்சென்ற அனைத்துடைமைகளையும், அமைப்புக்களையும் உருக்குலையாது அப்படியே வைத்து ஆண்டனுபவித்து வருகிறோமே; எதை நீக்கினோம்! ஒரு கிரிக்கெட் விளையாட்டைக் கூட மேற்கொண்டு நடத்தி வருகிறோமே? ஆறு குதிரை பூட்டிய அலங்காரக்கோச்சு வண்டிகூட இன்னும் இருந்து வருகிறதே அண்டை நாடுகளின் கெடுபிடிகளை யெண்ணின், இன்று ஆங்கிலேயர்களின் அனைத்துதவிகளுமின்றேல் நாடு நம்மிடம் இருக்குமா? மேலும் 'காமன் வெல்த்திலும் இருந்து வருகிறோமே? மொழியும் கருத்துப் பரிமாறிக்கொள்ளும் ஒரு கருவிப் பொருள்தானே? அதனை மட்டும் ஆங்கிலேயருடையதென ஒதுக்குவதுதான் நியாய புத்தியா? ஆங்கிலமே ஆட்சிமொழியாக நீடித்தால் நாட்டின் முன்னேற்றமும், ஒருமைப்பாடும் மிளிர்ந்து நிற்குமே? குழப்பம் விளைப்பானேன்?" என்றெல்லாம் பதில் கேட்கவும் தொடங்கியுளர் தமிழர்.

மொழி ஒரு கருவிப் பொருள் எனின் அவற்றைப் பயன் படுத்துவோர்களை எண்ணின், ஆங்கிலேயரும் தமிழர்க்கு அன்னியர்தான். வடவர்களும் அன்னியர்தான். ஆங்கிலேயரும் கிழக்கிந்தியக் கம்பெனியின் மூலமாக இந்த நாட்டில் நுழைந்து மெல்ல மெல்ல ஆட்சியைக் கைப்பற்றி உள் நாட்டிலுள்ள பல சிற்றரசுகளை யெல்லாம் அழித்து ஒரே ஆதிபத்தியமாக்கியவர்கள்: மக்களைப் பலவகையில் துன்புறுத்தியவர்கள்; அரசியல் ஆணவம் கொண்டவர்கள்; அடக்குமுறைக் கொடுமைகளை வீசியவர்கள். என்பதெல்லாம் உண்மையே. ஆங்கிலேயரின் 200 ஆண்டுக்காலம் இவ்வித ஆதிபத்திய ஆட்சியின் கீழ் தமிழகமிருந்தது. இன்று வடவர் பிடியும் அதை விடப்பன்மடங்கு வலுத்திருக்கிறது, கூட்டாட்சி என்ற பெயரால் அவர்கள் ஆட்சியின் கீழிருந்து வருகிறது தன்மைகள் பலவற்றிலும், ஆங்கிலேயரும், வடவரும் தமிழரைப் பொறுத்த வரையிலும்ஒன்றாகவே இருப்பினும், தமிழர் மனம் ஆங்கிலேயரை விரும்புமளவு வடவரை எண்ணுவதில்லை. இதற்கு அடிப்படைக் காரணம் யாது? இதுவியப்பாகவன்றோ உளது. என்று மேற்போக்காகப் பார்ப்பவர்களும் எண்ணக்கூடும்

(தொடரும்)

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

தனித்துவிளங்கும் இந்த அமைப்பினால் இக்குறள் தனிச்சிறப்புப்பெறுகிறது. இவ்வளவு வல்லெழுத்துக்களை வள்ளுவர் பெருமான் பயன்படுத்தியிருக்கிறார் என்றால் அவருக்கு எவ்வளவுசீற்றம் ஏற்பட்டிருக்கவேண்டும்? இதைவிட இடித்துரைக்கும் முறை வேறுளதோ? இக் 'குறள்நெறி' யையும், வள்ளுவர் சீற்றத்தையும் உணர்ந்து மாணவர் சமுதாயம் செயல்பட்டால் அஃது எத்துணை சிறப்புடையதாக இருக்கும்!

வள்ளுவர் இப்படி வாய்கூசாதெல்லாம் திட்டியிருக்கிறாரே என்று கருதிக்கலங்குதல் கூடாது.

'இன்பமும் துன்பமும் என்னும் இவைஇரண்டும்
மன்பதைக் கெல்லாம் மனமகிழ — அன்பொழி
உள்ளி உணர உரைத்தாரே — ஓதுசீர் [யாது
வள்ளுவர் வாயுறை வாழ்த்து' என்ற

அறுவை வேட்டனாரது பாடல் இதற்குக் கற்பிக்கும் காரணம் அறிந்து மகிழுதல் வேண்டும்.

மற்றும்,

"அழச்சொல்லி அல்லது இடித்து வழக்கறிய
வல்லார் நட்பை ஆய்ந்துகொளல்"

அறிவுடைமை என்று வள்ளுவப் பெருந்தகையே கூறியிருக்கிறார் அன்றோ!

குறள்நெறி 15-11-64 இதழ் பக்கம் பத்தாவதிலே, புலவர்-அரசு விளக்கும் அந்தக் குறளிலே.
பரிமேலழகர் கொண்ட பாடமாகிய பெற்றாள் என்பதை
விட வைத்துக்கொண்டு. திரு வி. க, கொண்ட பெற்றார்
என்ற பாடத்தால் போதரும் சீரியபொருளை நாம்பெறலாகும் எனச் சிறியேற்குத் தோன்றுகிறது:
பெற்றார் — தம்மை எய்திய கணவனை
பெண்டிர் — மனைவி
பெறின் — அவன் எங்கனம் தன்னை எய்தினானோ அதே
போல் அவளும் அவனை எய்தவாய்த்தால். அதாவது, இருவரும் ஒத்த அன்பு, ஒத்தகுணம் ஒத்த திரு உடையராய்வாழ்க்கைத்துணையோர் ஆகிடின்
இவ்வாறு உரை கூறி, தேவர் உலகத்தினர் அடையும் இன்பத்தை மண்ணுலகு இதிலே அடையஇயலும்என குறளின் உரையை முடிக்க.
வாழ்க்கைத்துணைநலம் அதிகாரத்தில் இந்த ஒரு குறள் தான்மணாளர் ஒப்புமைபற்றிக்கூறுவது. கு.ரா. சுந்தரேசன்

எழில் சிந்தும்! தமிழ் கொஞ்சும்
'குயில்'
ஆசிரியர் :
கவிஞர். வானம்பாடி
மொழி, நாடு, மக்கள்பற்றிச் சிறப்பாகப் பேசும் பாடும்
ஆண்டுக் கட்டணம் ரூ. 4. தனி இதழ் 16 காசு
தகவல்கட்கு : 'குயில்'
3, கோவிந்தசாமி நாயக்கன் தெரு
நெல்வயல், சென்னை-11.

மொழி நலம் பேண முனைந்து வாரீர்!

நெல்லை
ந. சொக்கலிங்கம்
பி. ஏ.

விதை நல்ல விதையாக அமைந்து விட்டால் மட்டும் இது தானாகவே வளர்ந்து பயன் தராது நீருற்றி உர மிட்டு வேலியடைத்துக் காத்தால் தான் எதிர்பார்த்த பயனை நல்கும். தமிழ் உயர் தனிச் செம்மொழி என்பது உண்மைதான். ஆனால் அப்படிக் கூறிக் கொண்டிருந் தால் மொழி வாழ்ந்து வளர்ந்து விடுமா? அதைக் காலப் போக்கிற்கேற்ப ஊட்டமளித்து வளர்க்க வேண்டாவா?

மொழி ஒரு சில புலவர்களால் மட்டுமே வளர்க்கப் பெறுவதன்று. புலவர் எழுதிக் குவிக்கலாம்; போற்றப் பெறல்வேண்டும் எனவே, மக்கள் மன்றத்திலே மொழி மதிப்பும் மாண்பும் பெறுமானால், தானே வளரும் என்பது மொழி நூலார் ஒப்ப முடிந்த உண்மை! வறுமையில் உழன்று வேலைக்குக் கூஞ்சியின்றிக் குழிந்த கண்ணும் ஒட்டி உலர்ந்த வயிறும் கொண்ட உழவன் திட்டுதிட் டாகப் பரந்து கிடக்கும் வெண் முகிலைக் கண்டு மழைக் குப்பயன்படாத மஞ்செதற்கு என்று மனங்குமுறுவானே தவிர மகிழ்ச்சியால் கற்பனை கட்ட மாட்டான். எனவே, கலையும் வாழ்வும் பிணைந்து சிறக்க வேண்டுமானால் வயிற்றுக்கவலை நீங்க வேண்டும். அதுகாறும் மொழிக் கோட்பாடாயினும் சரி மக்களிடத்தில்மதிப்புப் பெறாது என்பது காலம் கற்பித்துத் தந்த பாடமாகும். ஏன் இந்த நேரத்தில் மொழி பற்றிக் கூறுகின்றேன் எனில் நடுவரசின் ஒருபாற் சார்ந்த மொழிக் கொள்கை முனைந்து வருதலாலேயே! அதற்கேற்ப அன்னைமொழியாம் அருந்தமிழையும் உயர்த்திக் கொள்ள வேண்டு மன்றோ! அச்செயலை எவ்வண்ணம் தொடர்வது எனக் காண்போம். அப்படியானால் சூழ் கலி நீங்கித் தமிழ் மொழி ஓங்கித் துலங்குமன்றோ!

ஒரு மொழி இழிந்த மொழியாக இருப்பினும் ஆட்சி செலுத்தும் உரிமை மட்டும் அதற்கிருக்குமானால் அம் மொழி வளர்வது உறுதி. இதனைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் இருண்ட காலம் எனப் பெறும் சங்கம் மருவிய காலத்தில் காண்கின்றோம். ஆக, ஆங்கிலம் போன்ற மொழிகள் எவ்வாறு உலக மொழி என்று போற்றுமள விற்கு உயர்ந்ததோ அந்த அளவிற்குத் தமிழையும் வளர்க்கத் தமிழர்கள் அனைவரும் வரவேண்டும்: அரசியலாரின் அறிக்கைகளும் அலுவலக நடப்புக்களும் அருந் தமிழால் நடைபெறுமானால் தமிழ் வளரும்

"சேமமுற வேண்டுமெனில் தெரு வெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்"

என்று நமக்குத் தூண்டு கோலாகச் சொல்லித் தருகிறார் பாரதியார். வழக்கு மன்றங்களில் வண்டமிழின் சிறப்பும் வனப்பும் சீர்பெற வேண்டும் என்றால் அரசு ஆவன செய்தல் வேண்டும். மேலும் மக்கள் அவை போன்ற நல்ல செயல்களை வரவேற்க வேண்டும்.

தமிழில் இன்னும் முற்றும் முதிர்ச்சி பெறாத் துறைகள் பல உள. அவற்றுள் ஒன்று 'திறனாய்வுத்' துறை. இல்லை என்பது கருத்தன்று. அதனை முனைந்து நின்று வளர்க்க அஞ்சுகின்றனர் தமிழர் அதற்குக் காரணம் 'குறை சொல்லுதல் குற்றம்' என்று எண்ணி விடுதலே ஆகும் திறனாய்வின் திணிந்த பொருள் மேலும் மேலும் நல்ல பல படைப்புக்களை நல்குதற்கு ஊக்கமளிக்கும் செயலே என்பதை மறந்து விடுவதனாலேயே இடர்ப்பாடு ஏற்படுகின்றது குற்றமும் குணமும் நாடுவது தானே திறனாய்வின் பணி என்று படைப்போன் (Creator) நினைப்பானேல் திறனாய்வு வளர்வதுடன் மொழி வளரும்!

திறனாய்வு செய்வாரைப் பகைமை எண்ணத்தோடு பார்க்கின்றனர் படைப்போர்; அம்மட்டோ! பொதுமக்களும் தாம் போற்றும் படைப்போரின் நூலை இன்னார் திறனாய்வு செய்து குறை கூறுகின்றார் என்று தவறாக எடை போட்டு விடுகின்றனர். இந்தக் குறை என்று அகலுமோ அன்றே தமிழின் திறனாய்வுத் துறை வளரும்.

தமிழில் நல்ல நாடகங்கள் இல்லை என்ற குறை பரவலாக இருந்து வருவது கண்கூடு. இவ்விழி நிலையைப் போக்க வேண்டும் என்று அரசோ அன்றிப் பல்கலைக் கழகமோ கருதுமானால் நல்ல நாடகங்கள் எழுந்திருக்கு மன்றோ! தமிழகத்தில் தகுதியுடைய கவிஞர்கள் பலருளர். அவர்களிடையே போட்டி வைத்துத் தரமான செய்யுளால் இயலும் நாடகத்தை இயற்ற வழி செய்தல் வேண்டும். அப்போதுதான் நாடகத்துறையில் நலிவு தீரும்; நலம் பிறக்கும்.

சமயங்களை முதன்மையாகக் கொண்டு வந்த மடங்கள் போட்டியையும் பூசலையும் ஏற்படுத்திமக்களிடையே மனவேறுபாட்டை ஏற்படுத்திய கதையை வரலாறறிந்தவர் நன்கறிவர், தமிழை வளர்க்கச் சமயங்கள் பாடுபட வேண்டும் ஆண்டவனை அடைதற்குரிய வழிதுறைகளை வகுத்துரைக்கும் பாங்குடனே தோன்றியது சமயம்; என்றாலும் தமிழை வளர்க்கவும் அவை பாடுபடவேண்டும் இசுலாமிய மதமும், கிறித்தவ மதமும் சைவ, வைணவ மதங்களும் மொழியை வளர்ப்பதில் வேறுபடாது உழைத்தால் மொழி உயரும்!

தமிழ் நாட்டில் உள்ள கட்சிகளே தமிழின் வளர்ச்சி என்று சொல்லிப்பிளவு படுகின்றன. மொழியைவளர்க்கும் பணியிலே பிளவேன்? தமிழகத்தைப்பொறுத்தவரை ஒரு கட்சி கூறும் கருத்தை அடுத்த கட்சியார் கேட்டுச் செயல் படுவது இழுக்கு; மானக்கேடு என்று எண்ணுகின்றனர். மேலும் மாற்றார் சொல்லும் கருத்தை மதித்து நடந்தால் அது 'அரசியல் தோல்வி' என்று பிறழ உணர்கின்றனர். அது தவறு 'இன்பத் தமிழ் எங்கள் உரிமைச் செம்பயிருக்குவேர்' என்ற உணர்வு ஒவ்வொரு கட்சியினரிடையிலும் நிலவ வேண்டும்; ஒருமைப்பட வேண்டும். அந்த நிலையை நாம் தமிழகத்தில் கண்டால்தான் தமிழ் மொழி சிறக்கும்! மொழி வளம் பெருகும்!

மேனாடுகளின் அறிவியல் வளர்ச்சி யோடு ஆமை வேகத்தில், ஆக்கப பணி செய்து வருகிறோம். அவர்களோடு இயைந்து முன்னேற வேண்டாவா? மக்கள் அதனை எண்ணிச் செயல்பட வேண்டாமா? கள்ளப் பணம் சம்பாதிக்கும் துறையை வளர்க்கக் கற்றவன் அறிவை வளர்த்து ஆக்கத்தைப் பெருக்கு வழி கண்டானில்லையே என்பதை எண்ணும்போது நெஞ்சம் பொறுக்குதில்லை. இன்றுள்ள இழிநிலையை மொழிக் கொலையை திரு. வி. க. போன்ற தமிழ்ப்பெரியார்கள் காண்பரேல் கண்ணீர் விடமாட்டார்கள்; குருதியே கொட்டுவார்கள்!

எனவே, தமிழின் நலங்கருதி நம்மை ஈன்ற தாயின் நன்மை கருதி நற்றொண்டு செய்வோம்! தமிழுக்குத் தொண்டுசெய்தல் தலையாய கடனாகும்! தமிழன்னையைப் பிடித்த நோயை நீக்கிக் காலத்திற்கேற்ப உணவூட்டி வளர்க்கத் தமிழர்கள் - தமிழ் நாட்டில் பிறந்தவர்கள் - தமிழ் கற்றவர்கள் அனைவரும் முன்வருதல் வேண்டும். காலப்போக்குணர்ந்து கனி தமிழின் வளர்ச்சி கருதிச் சத்துள்ள உணவளிப்போம்! தமிழ், பண்பாட்டின் உயிர்? நம் வரலாற்றின் ஆணிவேர் என்று எண்ணிச் செயல்படுபோம்!!

மாற்றம் வேண்டும்!

— சேறை சுந்தரன்

வடநாட்டின் ஆட்சியாலே வாடை வீச
வளமான மாட்சியெல்லாம் இழந்து விட்டோம்!
விடநாக இந்தியிங்கே வாழ விட்டார்!
விளங்கும்நல் மொழியெல்லாம் வீழச் செய்தார்!
விடவேண்டாம் இந்திதன்னை வீழ்த்த வாராய்!
விருப்புடனே வலியுள்ள விரைவாய் வாராய்!
வடம்போலும் வலியுள்ள தோற்றம் தந்தே
வடநாட்டை எலியாக்கி அடக்க வாராய்!

தென்னாட்டில் இந்தியினை வாழ்த்தி ஏற்றார்!
தம்மொழியை நன்கறியார்; தாயைப் போற்றார்!
பொன்னேட்டில் இடம்பெற்ற பெயரைக் காற்றில்
பொறிபோலப் பறந்திடவே செய்தார் தூற்றி!
தன்னாட்டைத் தம்மொழியை அறியாச் சான்றோர்
தன்னலத்தால் இந்தியினைத் தாங்கிக் கொண்டார்!
நன்னாட்டில் நலம்செய்யாப் பொல்லார் வாழ்ந்தால்
நலமேது? நன்மையேது? மாற்றம் வேண்டும்!

தஞ்சையில் முத்தமிழ்க்காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் தலைமையில்

பண்டாரகர் பட்டம் பெற்ற திரு. சி. இலக்குவனாருக்குப் பாராட்டு.

விண்முதற் பூதமைந்தின் வியப்புறு கலப்பால் ஈண்டுக்
கண்படும் ஞாலத் துள்ளே கருப்பொருள் உருப்பெற் றோங்கி
நண்புற வளரா முன்னம் நாவசைத் திசைக்கத்தோன்றிப்
பண்பறி வளித்து வாழும் பைந்தமிழ் அன்னை ஆளும்

தென்னகத் திலங்குந் தூய சீர்த்திசேர் மரபில் வந்த
பன்னரும் புகழ்சால் அன்ப! பல்கலைக் குரிசில்! தூய
அன்னைசெந் தமிழ்த்தாய் பெற்ற அருமருந் தன்ன அண்ணால்!
இன்னியல் அறிவு சான்ற இலக்குவப் பெரியோய்! வாழி!

உரனொடு பெருமை மேவி உள்ளுணர் வோங்கச் சால்பசம்
அரணமைத் துலகம்உய்ய ஆண்டசெந் தமிழ்ப்பண்பாடு
மரபுகால் மயங்குங்காலை வளர் தமிழ்த் தொன்மைகாக்கப்
பரிவினால் இயல்நூல் செய்து பரப்பிய படிமையோன்சீர்

மறந்துசெய்ந் நன்றி கொன்று மாற்றவர் கூற்றை நம்பி
அறந்துறந் தடிமை போற்றி அறிவுபாழ் பட்டு நன்மை
குறைந்தொளி தேய்ந்து வாழும்கொடுமையைத் தமிழ்நா டுன்னச்
சிறந்ததொல் காப்பியன்பேர் செம்மையாற் றுங்கிநாளும்

தருபணி புரியத் தோன்றித் தழைக்குநற் கழகம்போற்றி
அகமகிழ்ந் தழைக்கப் போந்த அருந்தமிழ் மணியே! வாய்மை
திகழுநல்லாய்வு நூல்கள் செய்துசெந் தமிழ்த்தாய்பேணும்
மகவென விளங்குந் தக்கோய்! வருக! பல்லாண்டு வாழி!

இருந்தமிழ்க் கரணாய் ஓங்கி இலங்குதொல்காப்பியத்தின்
பெருந்தக வறியார் சொன்ன பிழைகளைந் தறிவாலாய்ந்து
மருந்தென மாற்றார் அஞ்ச மகிழ்ந்தமிழ் தெனயாம் உண்ண
விருந்தளித் தொளிரும் நல்லோய்! வீறுகொண்டூழிவாழி!

ஓங்குதொல் காப்பியத்தின் ஒளியினை அறிஞர் போற்ற
ஆங்கில மொழியிற் காட்டி ஆய்வுரை மிளிரத் தந்த
பாங்கினை அறிந்து சென்னைப் பல்கலைக் கழகம் போற்றி
ஊங்குபண் டாரகப்பேர் ஒளிபெற 'டாக்டர்" பட்டம்

தந்துதா னுயர்ந்த தன்றித் தமிழொளி யாகு முன்றன்
செந்தமிழ்ப்புலமை முற்றுந் தெரிந்திட அதுசாலுமோ?
முந்துநூல் யாவுங் கண்டு முறைப்பட எண்ணிச் செய்த
செந்தமிழ் முனைவன் நூல்போல் திகழுமுன் நூல்கள் வாழி!

அரிதுணர் பொருளைத் தேனூர் அருவிபோல் மாணாக் கர்க்குப்
பரிவினால்அளிக்கும் ஆசான்! பைந்தமிழ்ப்பயிர்வளர்க்கும்
கருவிமா மழையே! நண்பும் கலக்கமில் அறிவும் சான்ற
பெருமக! தமிழின் மேன்மை பிறங்கப்பல்லூழி வாழி!

தொன்மொழி யாவி னுக்கும் தொன்மையாய்ப் புதுமைக் குந்தான்
முன்மொழி யாகி நல்கும் மொய்ம்பொடு வாழும் சீர்த்த
தென்மொழித் திறனை மற்றைத் திசைமொழி யாருந் தேமப்
பொன்மொழி நூல்செய் திந்த புலவருட் புலவ! வாழி!

யாழிசைத் தமிழே போல ஞாலகின் புகழே பேச
வாழுமா நலனும் செல்வ வளனொடு புகழும் கூர
ஊழிபல் லூழி இங்கே உயர்தமிழ்ப் பணியே செய்து
வாழிபல் லூழி இன்பம் வழிவழி சிறக்க வாழி!

22-11-64 — தொல்காப்பியர் கழகத்தார்.

ஒருமொழி யாகி, ஈன்ற உயிர்மொழி யாகி. மங்காத்
திருமொழி யாகி, இன்பத் தேன்மொழி யாகி, வாழ்வு
தருமொழி யாகி, ஈன்ற தாய்மொழி யான வண்ணப்
பெருமொழித் தமிழ் வளர்க்கும் பேராசிரியரே வாழி!

இலக்கினை உடைய வாழ்வே இனித்திடும் வாழ்வு! நல்ல
இலக்கியமொழியும், நாடும்இப்புவிதன்னிலோங்கும்
இலக்கினில் தொண்டு செய்வோர் இரும்புகழ்க் குரிய ராவர்?
இலக்குவப் பெரியோய்! நீரும் இன்றமிழ்க் குழைத்து யர்ந்தீர்!

காப்பியம் பலபடைத்த கனித்தமிழ் மொழியின் சீர்தொல்
காப்பியந் தன்னை முற்றுங் கற்றவர் சிலரே! அந்தக்
காப்பியந் தன்னை ஆய்ந்து கருத்துக்கள் புதியகண்ட
காப்பியப்புலவ! உங்கள் கருதருந் தொண்டு வாழ்க!

அழகுதொல் காப்பியத்தின் அரும்புகழ் உலகி லெங்கும்
முழுதுறப்பரவும்வண்ணம் முழங்கிடும்ஆங்கிலத்தில்
மொழிபெயர்த் தரியதான மொழிப்பணி செய்தீர்! நாளும்
பழகுறுந்தமிழ்வளர்க்கும்பணியில்நீர்வளர்க! வாழ்க!

இன்னறுந் தமிழுக்கேநீர் இயற்றிய பணியி னைத்துப்
பன்னருஞ் சீர்த்தி, சென்னைப் பல்கலைக் கழகம் 'டாக்டர்'
எண்ணுமோர் பட்ட மிங்கே எழிலுற அளித்த செய்கை
அன்னையாதந் மிழ்க்களித்த அரும்பெரும் நன்றி யாகும்!

வயிற்றினை வளர்க்க எண்ணி வருமொழி எலாம்வ ளர்க்க
முயற்சிகள் செய்வார் தம்மை முத்தமிழ்ப் பகைவர் என்பேன்!
அயர்ச்சியில் இன்றிருந்தால் அவலமே எஞ்சு மென்றே
இயற்றிய மொழித்தி ணிப்பை எதிர்த்திடும் சான்றோய் வாழி!

இருள்நெறி தனில்ந டந்தே இடறிடுந் தாய கத்தைக்
குறள்நெறி நடத்திவைக்கக் 'குறள்நெறி' இதழ் நடத்தி
மருள்நெறி நீக்குகின்ற மணித்தமிழ்த் தொண்ட ரே! நீர்
உருள்நெறி பலபடைத்த உலகினில் உயர்ந்துவாழ்க!

முத்தமிழ்முழக்கமெங்கும் முழங்கிடுமாறும். இங்கே
நற்றமிழ்ப் பகைவ ரெல்லாம் நடுங்கிடு மாறும், நல்ல
புத்தமு தத்தமிழ்போல் பூமியில் இனிக்க வேதான்
நித்தமும் பணிபுரிந்து நெடிதுநீர் வாழ்க! வாழ்க!

— சி. சாமிஅன்பன், கே. வி. கே. சாமி படிப்பகம்

ஆக்கியோன்: புலவர் தொல்காப்பியன்,

மதுரைப் பாத்திமா மகளிர் கல்லூரியில் தமிழ் 'எம். ஏ.' வகுப்புத் தொடக்க விழா

டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் தலைமையில் கல்யாணி இராதாதியாகராசன் அவர்கள் தொடக்கிவைத்து ஆற்றிய சொற்பொழிவுச் சுருக்கம்

'பாண்டியர்கள் இம் மதுரையின்கண் சங்கம்நிறுவிச்செந்தமிழ் வளர்த்தது அங்கயற்கண்ணியின் அருட்பேற்றினலன்றோ? எனவே அவள் தமிழ்க்கொடி என அழைக்கப்பெறும் தகைமையுடையவள். அவள் அருள் பெற்ற இக்கல்லூரி மகளிர் தம் செயல்கள்யாவுமேகவினுறுவகையில்அமைந்துள. அவர்கள் அனுப்பிய ஓலை உருவிலமைந்த இவ்விழா அழைப்பிதழ் பொன்னோலை போன்று பொலிவுடன்திகழ்ந்தது.

தோற்றம் மறைவிலாத் தொல் தமிழ்என்றும் நிலைபிறழாது இலங்கும்தன்மைத்து. முன்னைப் பழமைக்கும் முன்னைப் பழமையாய் மூத்த தமிழ் பின்னைப் புதுமை வளம் யாவும்பெற்றுச்சீரிளமைத் திறத்துடனே, உலக வழக்கழிந் தொழியாக் கன்னித் தமிழாகக் காட்சி தருகின்றது.

அறநெறி பிறழாது செவ்விய வாழ்வும் அரசும் நடத்திய அன்றைய தமிழ் வேந்தர்கள் தமிழைக் கற்றுத் தமிழ்நெறி நின்று வாழ்ந்தனர். மன்னர்களின் நண்பர்களாகிய நற்றமிழ்ப் புலவர்கள் மிகுதிக்கண் மேற்சென்றிடித்துரைகூறும் பொருட்டே நட்புக் கொண்டனர். புலவர்களிடம் பேரன்பு கொண்ட மன்னரையே மக்களும் மதித்தனர். மன்னர் வாழ்விற்குத் தமிழ்நெறி துணை புரிந்தால் அ ம ளர்களால் தமிழும் வளம்பட்டுளது. பன்னூறு புலவர்களால், பன்னெடுங்காலமாக நெறிப்படுத்தி, வகைப்படுத்தப்பட்ட தமிழ்இலக்கணம்தொல்காப்பியமாகும். தொல்காப்பியம் தோன்றுதற்கு முன்னரே இலக்கியநூற்களும், இலக்கண நூற்களும் இருந்தன என்பதைத்தொல்காப்பியத்தினின்றும் நாம் அறியலாம். உள்ளத்துள்ள இன்பஉணர்வுஉருவெடுப்பது இலக்கியமாகும். இலக்கியம் மக்கள் வாழ்வு முறையின் எதிரொலியாகும்''

எனக்கூறினர். கலித்தொகை, சிலப்பதிகாரம், கம்பராமாயணம், முதலியவற்றிலிருந்து சிலகாட்சிகளை எடுத்துக்கூறி முத்தமிழும் விரவிய நடையில் உரை நிகழ்த்தினர். மாணவியர் தம் செவிப் புலன்கொண்டு தமிழ் இன்னுணவு மாந்தித் திளைத்தனர்.

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

-பிறமொழி மோகத்தையும் கண்டு தாய் மொழியின் பெருமைகளை உணர்ந்தோர் தவிக்கின்றனர்! பலர் தூங்கி வாழும் போது, சிலர் விழித்துக் கொண்டு தவித்து யாது பயன்? செந்தமிழ் வீடே 'மொழிவெறித்தீ'யால் எரிந்து கொண்டிருக்கும் போது தமிழர்கள் அனைவருமன்றோ துள்ளியெழுந்து கொடுந்தீயை அணைக்க முற்பட வேண்டும். இல்லெனில் தமிழைக் காக்கத் துடிக்கும் ஒரு சில தூய தமிழ்த் தொண்டர்களையும் மொழி வெறிச் சூதாட்டம் ஒடுக்கி விடுமன்றோ? பிறகு தமிழன் நிலைமை என்ன? தாய் மொழியைப் போற்றும் உரிமையிழந்து இந்தி விலங்கு பூண்ட அடிமையன்றோ. தமிழன்!

தமிழ் நாடு செழித்து. தமிழன் நலமுற வேண்டுமெனில் இதற்கு வழி ஒன்றே: செந்தமிழ்த்தாய், மாசடையாது - நோயுறாது- :இந்தி' பொசுக்காது - காக்கப்படுவதே யாகும். தமிழைக் காப்பது தமிழர்கள் அனைவருடைய முதற் கடமையாகும்.

இந்தியை எதிர்த்துத் தடுப்பதே தமிழைக் காப்பதென்றெண்ணி, இந்தியை எதிர்க்க இயலாதோர் வாளாயிருத்தல் வேண்டா. தற்போது இந்தியை எதிப்பதே, தமிழுக்காற்றும் சிறந்த தொண்டென்பதில் ஐயமில்லை, எனினும், வேறு வகையில் தமிழுக்காற்றவேண்டிய தொண்டுகள் பல உள. அவற்றுள் சிலவற்றையேனும் தமிழர்களனைவரும் மேற்கொள்ள வேண்டும்.

பாலில் நீர்கலந்தாற்போல், தமிழில் கலந்துள்ள வடசொற்களை நீக்கி, தனித்தமிழில் எழுதியும் உரையாடியும் இன்புறுவோம் நமக்குள் அடங்கி விடாது நண்பர்கட்கும், சுற்றத்தாருக்கும், தமிழர்கள் அனைவருக்குமே தனித்தமிழின் இனிமைகளையும் சிறப்புக்களையும் எடுத்துரைத்து நல்வழி காட்டுவோம். தமிழனாய்ப் பிறந்தும் தமிழ் நிலத்தில் வாழ்ந்தும், தமிழில் மடல் தீட்டுவதை - உரையாடுவதை - இழிவெனக் கருதும் [அ] நாகரிக மனிதர்களிடமும், இனிக்கும் தமிழ்ச்சொற்கள் பலவிருக்க 'க்ஷேமம்' 'நமஸ்காரம்' போன்ற வடமொழிச் சொற்களைக் கொண்டு தமிழைக் கெடுப்போரிடமும், மழலை மொழி பேசும் தம் குழந்தைகளிடம் ''மாமாவுக்கு டாடா சொல்லு...''... ''பை..பை.. சொல்லு.'' எனக்கற்பிக்கும் பெற்றோர்களிடமும், இன்னும் இவைபோன்று எண்ணற்ற வழிகளில் தமிழையும் தமிழ் மரபையும் கொன்று வாழும தமிழர்களிடமெல்லாம். சிறிதும் தயங்காது, ஒதுங்காது அவர்களுடைய குறைகளை எடுத்துக் கூறுவோம்; விளக்கித் திருத்துவோம்; அன்போடு வேண்டியும், அறிவோடு விளக்கியும் இத்தகைய மடமைகளை ஒழிப்போம்.

தமிழன் இல்லத்தில் தனித்தமிழ் ஒலிப்பதில்லை; தமிழர்கள் பெயர்களும் தமிழ்ப் பெயர்களாக இல்லை. இல்லங்களில், வீதிகளில்காணப்படும் பெயர்ப்பலகைகள் தமிழில் எழுதப்படவில்லை. தமிழர்கள் மட்டுமே வாழும் சிறு நகரங்களில் கூட, கடை வீதிகளில் காணப்படும் விளம்பரப் பலகைகளும் பெயர்ப் பலகைகளும் தமிழில் எழுதப்படவில்லை. பம்பாய் முதலாளிகளோ தில்லி வியாபாரிகளோ, தமிழ் தெரியாத வேறு எந்த நாட்டவரோ தொடர்பு கொள்ளாத, தமிழ் நாட்டு முருகன், முத்து போன்ற தமிழ் மக்கள் மட்டுமே உலவும் மணப்பாறை போன்ற ஊர்களில் கூட 'ஓடியன் சலூன்' 'சுபிடர் டாக்கீசு' 'சண்முகா கேப்' 'வீனசு கிளாத் ஸ்டோர்' எனும் பெயர்ப்பலகைகள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுக் காட்சியளிக்கின்றன. இவற்றையெல்லாம் தகுந்த தமிழ்ச் சொற்களில் தமிழிலேயே எழுதவில்லையே, ஏன்? பிறமொழிப்பித்தம்-அறியாமையே' காரணமன்றோ? இத்தகையோர் உண்மையறிந்து திருந்துவதும், பிறரைத் திருந்த வைப்பதும் தமிழை மதிப்பதாகும். இல்லெனில் தமிழை மதியாததோடன்றி, இன்று ஆங்கிலம் காணப்படும் இடங்களில் நாளைக்கு இந்தியைப் புகுத்தி மேலும் தமிழை அவமதித்து அழிக்கவும் முற்படுவர்.

பட்டத்தையும் - பதவியையும் எண்ணிக் கொண்டு தமிழை மறக்கும் கயமையை அகற்றுவோம்; பேரறிஞராயினும் - மருத்துவராயினும் – வழக்குரைஞராயினும் -எப்பணி புரியினும் - 'யானும் தமிழனே; எனக்கும் தமிழைக்காக்கும் கடமையுண்டு' எனத் தெளிந்து, 'தமிழைக் காப்பதும் - தனித்தமிழ் வளர்ப்பதும்–பிற தொண்டுகளும் தமிழ்ப் புலவர்களுக்கே உரிய பணி; நமக்கென்ன' என்று ஒதுங்காது, ஒவ்வொரும் தம்மால் இயன்ற வரையில் தமிழன்னைக்குத் தொண்டாற்ற எழுவோம்; உறுதியோடு உழைப்போம். தமிழ் வாழும்; தமிழ் மரபு நிலைக்கும்; தமிழன், நலமும் வளமும் பெற்று இனிதே வாழ்வான்! வாழிய செந்தமிழ்; வாழ்க நற்றமிழர்!

கட்டண விவரம்

குறள் நெறி

அச்சகம்

வரும் தைத்திங்கள் முதல்

ஆண்டுக் கட்டணம் உருபாய் 6-00
இரண்டு ஆண்டுக் கட்டணம் உருபாய் 10-00

இரண்டு ஆண்டுக் கட்டணமாக உருபாய் பத்துச் செலுத்தி உறுப்பினராக வேண்டுகின்றோம். தைம்முதலாக மார்கழி முடிய ஓராண்டு ஆதலின் ஆண்டுக் கட்டணம் உருபாய் ஐந்து செலுத்தி முதல் இதழ் முதலாகப் பெற்றுவருபவர்கள் அடுத்த ஆண்டுகட்குரிய கட்டணம் செலுத்தி உறுப்பினராகப் புதுப்பித்துக்கொள்ளுதல்வேண்டும். ஆதலின் அன்புகூர்ந்து குறித்த காலத்திற்குள்—தைத் திங்கள் முதல் நாளுக்கு முன்—ஆண்டுக் கட்டணத்தை அனுப்பிவைக்குமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

'குறள்நெறிக்'கென அச்சுக்கூடம் நிறுவும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதனாலும், பொங்கல் மலர் தை முதல்நாளில் மிகுந்த பக்கங்களுடன் வெளிவர இருப்பதனாலும். அடுத்து **மார்கழித் திங்கள் முதல்நாள், பதினைந்தாம் நாள்** வெளிவரும் இதழ்கள் **வெளிவரா** என அறிவித்துக் கொள்கின்றோம்.

அடுத்த இதழ் பொங்கல் மலராக நிறைந்த பக்கங்களுடன் அழகிய முறையில் **தைம் முதல் நாளன்று** அனைவர்க்கும் கிடைக்கும்.

விற்பனையாளர்கள் தமது பாக்கி முழுவதையும் செலுத்தி பொங்கல் மலர்க்கும் வேண்டும் படிகட்குத் தமக்குரிய கழிவுநீக்கி முன்பணம் அனுப்புமாறு வேண்டுகின்றோம்.

— செயலாளர்
'குறள்நெறி', மதுரை-6.

நாம் செல்லுமிடங்களில் 'குறள்நெறி' இதழைப் பலபடப் பாராட்டி, நற்றமிழ்க்கென உழைத்திடும் இவ்விதழ் வார வெளியீடாகத் தொடர்ந்து நடத்தப்பெறுதல்வேண்டுமெனவும் புத்தக வடிவில் வெளிவந்தால் என்றும் காத்து வைத்துக்கொள்ள உதவுமெனவும், தமிழறியார்க்குத் தமிழைப்பற்றி யறிவிக்க ஆங்கில இதழ் ஒன்று வெளியிட வேண்டுமெனவும், அன்பர்கள் உரைக்கின்றனர். அன்பர்கள் விருப்பங்களை நாளடைவில் நிறைவேற்றவும் அச்சுப் பிழையின்றி அழகிய தோற்றத்தில் வெளியிடவும் 'குறள்நெறி'க்கு எனத் தனி அச்சகம் இருந்தால்தான் இயலும் என்றுகருதி அதனை நிறுவும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். இப்பணிக்கு உதவுமாறு அன்பர்களை வேண்டியிருந்தோம். எம் வேண்டுகோளுக்கு இரங்கி உதவியுள்ள அன்பர்கள் :

புலவர் இரா. இளங்குமரன்
நன்கொடை உருபாய் 100
கடன் உருபாய் 300

முத்தமிழ்க்காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம்
நன்கொடை உருபாய் 101

மலேசியா இராமசாமிச் செட்டியார்
நன்கொடை உருபாய் 100

இவர்கட்கு எம் உளமார்ந்த நன்றி என்றும் உரித்தாகுக.

இவ்வாறே ஆங்காங்குள்ள நண்பர்களும், மாணவர்களும் தம்மாலியன்ற பொருளுதவிசெய்யுமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

'குறள்நெறி' பரப்பவும் நற்றமிழ் காக்கவும் ஒல்லும் வகையால் உதவுவது உம் கடன். பணி செய்து கிடப்பது எம் கடன். — ஆசிரியர்

திரைப்படத் திறனாய்வு: 'நவராத்திரி' — சிவக்கண்ணன்

தந்தையின் வற்புறுத்தலுக்கு இணங்கி. மணத்திற்கு ஒவ்வாத மணாளனை மணக்கவிரும்பாத இளம் பெண் ஒருத்தி வீட்டை விட்டு வெளியேறுகிறாள். விளைவு? எட்டு நாட்களுக்குள் எட்டுவகையான மனிதர்களைச் சந்திக்கிறாள். இறுதியில் தன் காதலனையே சென்றடைகிறாள்.

ஒன்பது வகை மனிதர்களாய்த் தோன்றுபவர் நடிகர் திலகம். அவருக்கு ஈடு கொடுத்து நடித்திருப்பது நடிகையர் திலகம். கணேசனுக்கு இந்த ஒன்பது வேடங்களும் பழகியவைதான் என்றாலும் உதிரியாகக் கிடக்கும் பலவகை மலர்களை ஒரே மாலையாகத் தொடுத்துப் பார்த்தால் அது ஒரு தனி அழகுடன் விளங்குவதைப்போல, ஒரே படத்தில் பலவகை வேறுபட்டபாத்திரங்களில் காணும்போது அவரது தனித்திறமைவெளிப்படத்தான்செய்கிறது ஒரு பாத்திரத்திற்கும் அடுத்த பாத்திரத்திற்கும் உள்ள வேறுபாடு தெளிவாகத்தெரிகிறது. அற்புதராசனின். உடல்மெளிவும் குடிகாரனின் கோழைத்தனமும், சித்த மருத்துவநிபுணரின் கருணை வழியும் பார்வையும், கோபக்காரனின் முரட்டுத்தனமும், பட்டிக்காட்டானின் வெகுளித்தனமும். பிணியாளனின் பரிதாபத் தோற்றமும், நாடக நடிகனின் 'தொழில் நுணுக்கமும்' காவல்துறைத் தலைமை அதிகாரியின் வெடிச் சிரிப்பும், ஆனந்தனின் துறவு நிலையும் ஒன்றோடொன்று போட்டி போட்டுக் கொண்டு பார்ப்பவர் மனத்தில் முதலிடம்பிடித்துக் கொள்ள முயற்சி செய்கின்றன. இத்துணை வேறுபாடான பாத்திரங்களுக்கு ஏற்றவாறு தன்னை மாற்றிக்கொண்டு பார்ப்பவர்களது உள்ளங்களைக் கொள்ளைகொண்டுவிடுகிறார் சாவித்திரி. குறிப்பிடப்படவேண்டியது மூளைக்கோளாறு விடுதியும், நாடக மேடையும்,

இயக்குநர் பொறுப்பை ஏற்றிருக்கும் தயாரிப்பாளர் பொறுப்பை உணர்ந்து பணியாற்றியிருக்கிறார். உரையாடல்கள் பாத்திரங்களுக்குச் சுவையூட்டுகின்றன. இசையமைப்பாளரைத் தட்டியெழுப்ப மறந்தது தயாரிப்பாளர் குற்றமா அல்லது எழுந்திருக்க மறந்தது இசையமைப்பாளர் மகாதேவன் குற்றமா என்று தெரியவில்லை.

முடிவாக: 'நவராத்திரி' நிறைவுதரும் பொழுது போக்கு,

ஆசிரியரும் வெளியிடுபவரும்: தமிழ்க் காப்புக் கழகத்திற்காக டாக்டர் சி. இலக்குவனார், கருமுத்து அகம், மதுரை-6
அச்சிட்டோர்: கு. திரவியம், மேலாளர், கலைக்கோயில் அச்சகம், 62, நாயக்கர் புதுத்தெரு, மதுரை.